Follow us

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 496 பிலவ வருடம், பங்குனி மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை
(07.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 05 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## ஹர்ஷ டி சில்வாவுக்கு ஜனாதிபதி பதவி!



இடைக்கால அரசுக்கு சபையில் முன்மொழிந்தார் ஹரின்

02 பக்கம்

## ஜனாதிபதி ஒருபோதும் பதவி விலக மாட்டார்!



அமைச்சர் ஜோன்ஸ்டன் நேற்று திட்டவட்ட அறிவிப்பு

02 பக்கம்




# 'கோ ஹோம் கோட்டா' சபையில் பேரொலி!

யோ. தர்மராஜ்

நாடாளுமன்றத்திற்கு வெளியில் மக்கள் கோஷமிட்டு கொண்டிருக்கும் "கோ ஹோம் கோட்டா" என்ற வசனத்தை எதிர்க்கட்சியினர் நேற்று சபையினுள் கோஷமிட்டதுடன், ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவை உடனடியாக பதவி விலகுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து சபாநாயகர் தலைமையில் இரு நாள் விவாதம் நடத்தப்படுகின்றன. இதன்முதல் நாள் விவாதம் நேற்று இடம்பெற்றபோது ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்புக்கிடையில் கடும் வாக்கு வாதங்கள் ஏற்பட்டன.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் ஆயுதத்துடன் வந்தவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்கவின் வாகனத்தில் ஏறியவர் யார் என்ற விடயங்கள் சபையில் சூடுபிடித்தன. இதனால் ஆளுந்தரப்பு பிரதான கொறடா மற்றும் ஜே.வி.பி எம்.பிக்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதற்கிடையில் மக்கள்...

02 பக்கம்

## பைத்தியம் எனக்கா? ஜனாதிபதிக்கா?

அனுரகுமார கேள்வி

02 பக்கம்



## நாட்டில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படலாம்; எச்சரிக்கை விடுத்தார் சபாநாயகர்!



யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார தட்டுப்பாட்டை விட பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக இருநாள்... 02 பக்கம்

## இலக்கத் தகடுகளற்ற மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் யாரென்பதை வெளிப்படுத்துக!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் கோரிக்கை



யோ.தர்மராஜ்

நாடாளுமன்ற வளாகத்தில் பொதுமக்களின் போராட்டத்தில் இலக்கத் தகடுகள் இல்லாத மோட்டார் சைக்கிளில் முகக்கவசத்துடன் வந்தவர்கள் யார், அவர்கள் இரகசிய இராணுவமா அல்லது வேறொரு குழுவா என்பதை அரசாங்கம்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



கடைசியா பெடரலும் இல்ல
பெற்றோலும் இல்ல...

## பாடசாலை கற்பித்தல் ஒரு மணிநேரம் நீடிப்பு

### 18ஆம் திகதிமுதல் அமுல்

அரசாங்க பாடசாலைகளில் எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் புதிய நடைமுறை செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 18ஆம் திகதிமுதல்... 02 பக்கம்

## பாடசாலைகளுக்கு நேற்று முதல் விடுமுறை

அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு நேற்று தொடக்கம் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய, மீண்டும் ஏப்ரல் 18ஆம் திகதி பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

## ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் கவலை



இலங்கையில் காணப்படும் பதற்ற நிலையை அமைதியான வழிமுறைகளைப் பயன்படுத்தி அரசாங்கம் தணிக்கவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பேச்சாளர் லிஸ்த்ரோசல் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அதன் வரலாற்றில் பல தசாப்தங்களில் காணாத மோசமான... 02 பக்கம்

### உஷ்



அரசுக்கு ஆதரவை வழங்கிவந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் அந்த ஆதரவை விலக்கிக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளனராம்.

இந்த 7 பேரையும் சந்திக்க முன்னாள் நிதியமைச்சர் பெசில் முயன்றபோதும் அவர்கள் அந்த சந்திப்பை தவிர்த்துவிட்டதாக அறியமுடிகிறது.

இதேவேளை புதிய அமைச்சுப் பதவிகளை வழங்க எம்.பிக்கள் பலரின் பெயர்கள் அரச மேல்மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டதாம். ஆனால் அவர்கள் எவரும் அமைச்சுப் பதவிகளை ஏற்க விருப்பமில்லையென சூசகமாக தெரிவித்திருப்பதால் கலங்கியுள்ளது அரச மேலிடம்.

## அமளிதுமளியால் சபை 2 தடவைகள் ஒத்திவைப்பு

யோ.தர்மராஜ்

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்த முதல் நாள் விவாதத்தில் இடைநடுவே குழப்பங்கள் ஏற்பட்டதால் இருமுறை சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக இருநாள் விவாதத்தின் முதல் நாள் விவாதம் நேற்று சபாநாயகர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, கோ ஹோம் கோட்டா மற்றும் அனுர குமாரவின் வாகனத்தில் ஏறிய நபர் தொடர்பான விடயங்கள் சபையில் சூடுபிடித்தன. நாட்டின் நிலைமை குறித்து அரசாங்கம் தரப்பில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ... 02 பக்கம்

## அவசரகால சட்டத்தை நீக்கி விசேட வர்த்தமானி வெளியானது




நாட்டின் நெருக்கடி நிலைமையை அமுலுக்கு கொண்டுவந்த அவசரகால சட்டத்தை அரசாங்கம் வாபஸ் பெற்றது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும் வகையில், அவசரகால சட்டத்தை நீக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டுள்ளது. முன்னதாக, ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் அவசரகால நிலை பிரகடனப்படுத்தி, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 02 பக்கம்

## அரசியல் புரட்சியின் பரிமாணங்களை எடுத்திருக்கும் இலங்கை மக்கள் கிளர்ச்சி




### த இந்து ஆசிரிய தலையங்கம் சுட்டிக்காட்டு

இலங்கையில் மக்களின் வீதிப்போராட்டங்கள் மேலும் தீவிரமடைந்து கொண்டிருக்கும் நிலை யில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகமும் அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமும் மக்களின் ஆதரவையும் அரசியல் நேச சக்திகளின் நம்பிக்கையையும் இழந்துவிட்டன போல தோன்றுகிறது.

அரசியல் மற்றும் சமூக மட்டங்களில் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டால் மாத்திரமே இலங்கை மக்களுக்கு பொருளாதார விமோசனம் கிடைக்கும் என்று இந்தியாவின் முக்கியமான தேசிய செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான த இந்து (ஆங்கிலம்) நேற்று புதன்கிழமை அதன் ஆசிரிய தலையங்கத்தில் வலியுறுத்தியிருக்கிறது.

02 பக்கம்



## ஜனாதிபதி ஒருபோதும்...

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதிக்கு 69 இலட்ச மக்கள் வாக்களித்துள்ளதால், அவர் ஒருபோதும் பதவி விலகமாட்டார். சவால்களுக்கு முகம் கொடுப்போம் என ஆளுந்தரப்பு பிரதான கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னான்டோ சபையில் திட்டவட்டமாக அறிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக இருநாள் விவாதத்தின் முதல் நாள் விவாதம் நேற்று சபாநாயகர் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டபோது, ஜனாதிபதியின் பதவி விலகல் குறித்த எதிர்க்கட்சியின் பிரதான கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி பதவி விலகுவது தொடர்பாக பிரதான கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கருத்துத் தெரிவிக்கையில்,

கட்சித் தலைவர் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களை சபையில் முன்வைத்த போதிலும் நாங்கள் முன்வைத்த எந்த யோசனையையும் சபாநாயகர் சபையில் முன்வைக்கவில்லை.

குறிப்பாக, ஜனாதிபதியை பதவிநீக்க முடியுமா என்ற கேள்விக்கு நாங்கள் யோசனைகளை முன்வைத்தோம். ஜனாதிபதி பதவி விலகினால் நாடாளுமன்றத்திலுள்ள ஒருவரை தெரிவுசெய்து ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கலாம் எனக் கூறினோம். எனினும், சபாநாயர் அறிக்கையில் அதனை சேர்த்துக்கொள்ளவில்லை – என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர்,அது குறித்தே சபையில் விவாதம் நடத்துகின்றீர்கள். விவாதம் நடத்தி இறுதித் தீர்மானத்தை எடுங்கள். ஜனாதிபதி பதவி விலகுவது எனக்கு தேவையில்லாத விடயம். அதனை நீங்கள் சபையில் முன்வையுங்கள். நீங்கள் கூறுவது அரசியலமைப்பிலுள்ளது. அதனை நீங்களே ஆளுந்தரப்பிடம் கூறி முடிவெடுங்கள் - என்றார்.

இதனையடுத்து, இதற்கு பதிலளித்த ஆளுந்தரப்பு கொறடா, ஜனாதிபதிக்கு 69 இலட்ச மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே, ஜனாதிபதி ஒருபோதும் பதவிவிலகமாட்டார். சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுப்போம் - என்றார்.

## நாட்டில் உணவுத்தட்டுப்பாடு....

விவாதத்திற்கு தலைமை தாங்கியபோது, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களை சபைக்கு அறிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து இரு நாள் விவாதத்தை நடத்துவதற்கு கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. வரலாற்றில் இல்லாதவாறான பொருளாதார நெருக்கடி தொடர்பாகவே விவாதம் நடத்தப்படுகின்றன என்பது அனைவரும் தெரிந்ததே. மேலும் இந்த நிலைமை உக்கிரமடையும் என நிபுணர்கள் கூறுவதைக்கொண்டு இந்த நெருக்கடி ஆரம்பநிலையில் இருப்பதாக கூறுகின்றேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார தட்டுப்பாட்டை விட பாரிய உணவு தட்டுப்பாடு ஏற்படலாம் என எதிர்வு கூறப்படுகின்றன. நாங்கள் இந்த ஒருவாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமைய இந்த நிலைமை தொடருமா அல்லது கட்டுப்படுத்தப்படும் என்பது தீர்மானிக்கப்படும்.

கடந்த நாட்களில் நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட அசௌகரியங்கள் ஏற்பட்டதை நான் அறிவேன். ஜனநாயகத்தின் பொறுப்பானவர்கள் என்பதால் இதனை நான் கண்டிப்பதுடன், இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கும் பாதுகாப்பு பிரிவிற்கும் நான் அறிவித்துள்ளேன் என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

எனினும், மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களினாலேயே எங்களுக்கு எதிராக அவர்கள் ஒன்றுதிரண்டுள்ளனர் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மக்களின் பிரதிநிதிகள் என்பதால் நாங்கள் சபைக்கு சமூகமளிக்க வேண்டும். எங்களை தெரிவு செய்துள்ள மக்களுக்கு பொருளாதார நெருக்கடி நன்றாகவே புரிந்துள்ளது. எனவே, அதனை நாங்கள் விளங்கிக்கொண்டு, சபையில் நடக்கும் விவாதத்தில் தவறு யாருடையது, எங்கு நடந்தது என்பதை ஆராயாது, நெருக்கடிக்கு என்ன தீர்வு, எவ்வாறு அதனைத் தீர்ப்பது என்பதை ஆராயுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மக்களுடன் இணைந்து செயற்படுவதனால் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது முகங்கொடுத்துள்ள பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றத்தினுள் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கையுள்ளது. இல்லையேல் நாடாளுமன்றத்தின் ஜனநாயகம் தோல்வியடையும். இதனால், இலட்சக்கணக்கான மக்கள் மற்றும் எங்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

நாடாளுமன்றம் தோல்வியடைந்ததால் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டதை என்னுடைய வாழ்க்கையில் கண்டுள்ளேன். ஆகவே, நாங்கள் அதிகம் அவதானம் செலுத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

அத்தோடு, நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு ஜனநாயக மற்றும் அரசியலமைப்புக்கு உட்பட்ட தேசிய வேலைத்திட்டமொன்றை இவ்வாரத்திற்குள் ஸ்தாபிக்குமாறு உறுப்பினர்கள் மற்றும் மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

நாங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களிலேயே பல உயிர்கள் பாதுகாக்கப்படும் என்பதை புரிந்து கொண்டு அனைத்து உறுப்பினர்களும் விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## ஹர்ஷ டி சில்வாவுக்கு...

கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை தற்காலிக ஜனாதிபதியாக்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இந்த நாடாளுமன்றில் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால், 225 உறுப்பினர்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன? இதுதான் இந்த நாட்டின் நிலைமை.

ஒரு வருடத்திற்கு சம்பளம் வேண்டாம். நாடாளுமன்றில் உள்ள உணவகத்தில் உணவு உட்கொள்ள மாட்டேன் என அனைத்து எம்.பிக்களாலும் கூற முடியுமா?

நாடு இப்போது பாரிய பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ கௌரவமாக பதவி விலக வேண்டும். மக்களும் அதையே கோருகிறார்கள். கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு பொருளாதாரம் தொடர்பில் நன்கு கற்ற ஹர்ஷ டி சில்வாவை தற்காலிகமாக ஜனாதிபதியாக்குவோம்.

பொருளாதார நெருக்கடியை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்பது ஹர்ஷவுக்கு தெரியும். அதை விட்டுவிட்டு பதவிக்காகவோ, தேர்தலுக்காகவோ போட்டியிடவேண்டிய நேரம் இதுவல்ல . அப்படி இல்லையென்றால், மக்கள் விடுதலை முன்னணியாவது ஒரு அணியாக திரட்டிக்கொண்டு தற்காலிகமாக அரசை பொறுப்பேற்று செய்து காட்டுவதற்கு வாய்ப்பளிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார் ஹரின்.

## ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தும்...

பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு எதிராக எழுந்துள்ள பாரிய ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுவத்துவதற்காக அதிகாரிகள் அவசரகால சட்டத்தினையும், ஏனைய கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளதை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

சமீப காலமாக பொதுமக்களின் விரக்தி அதிகரித்து வருவதுடன், பெருமளவிற்கு அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெறுகின்றன. எனினும் திடீரென எரிபொருள் சமையல் எரிவாயு அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுபாடு மற்றும் மின்வெட்டு காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக நிலைமை மோசமடைந்துள்ளது. இது வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு மற்றும் அடிப்படை பொருட்களை பெறுவதால் கடும் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ள இலங்கையர்கள் மத்தியில் மேலும் எதிர்ப்புகளை உருவாக்கியுள்ளது.

மார்ச் 31ஆம் திகதி ஜனாதிபதியின் இல்லத்திற்கு வெளியே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அரசாங்கம் முதலாம் திகதி அவசரகாலநிலையை பிரகடனம் செய்ய தீர்மானித்தது. ஏப்ரல் இரண்டாம் திகதிமுதல் 36 மணிநேர ஊரடங்கினை அறிவித்த அரசாங்கம், மூன்றாம் திகதி 15 மணிநேரத்திற்கு மேல் சமூக ஊடகங்களை முடக்கிவைத்திருந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற அளவுக்கதிகமான வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மக்கள் தங்கள் நியாயபூர்வமான கரிசனைகளை அமைதியான வழிமுறைகள் மூலம் வெளிப்படுத்துவதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டவை என நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். மேலும் இவை பொதுமக்களின் நலன் தொடர்பான விடயங்கள் குறித்த கருத்து பரிமாற்றத்திற்கு முட்டுக்கட்டை விதிக்கின்றன.

அவசரகால சட்டம் தொடர்பான நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களை பின்பற்றுபவையாக காணப்படவேண்டும் என்பதையும், சூழ்நிலைக்கு தேவைப்படும் அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படவேண்டும் என்பதையும், இணங்க மறுத்தலை தடுப்பதற்கோ அல்லது அமைதியான ஆர்ப்பாட்டங்களை தடுப்பதற்கோ அவற்றை பயன்படுத்த முடியாது என்பதையும் இலங்கை அரசாங்கத்திற்கு நாங்கள் நினைவூட்டுகின்றோம்.

இலங்கை நிலைவரத்தை மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும். மனித உரிமை பேரவைக்கான தனது பெப்ரவரி அறிக்கையில் மனித உரிமை ஆணையாளர் தெரிவித்தது போல இராணுவமயப்படுத்தலை நோக்கிய நகர்வுகள் உட்பட பல விடயங்களால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக்கண்டு இலங்கை மக்களின் பொருளாதார கலாசார உரிமைகளை உறுதிசெய்வதற்கான அரசாங்கத்தின் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார அரசியல் சவால்களுக்கு தீர்வைக் காண்பதற்கும் நிலைமை மேலும் துருவமயப்படுத்தப்படுவதை தவிர்ப்பதற்கும் உடனடியாக அனைவரையும் உள்ளடக்கிய அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறு அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் - இவ்வாறு ஐ.நா அலுவலகம் கேட்டுள்ளது.

## அவசரகால சட்டத்தை...

இதனைத் தொடர்ந்து, மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் இது குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதுடன், நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் பேசப்பட்டது.

அவசரகால சட்டத்தைத் தொடர்ந்து நீடித்துச் செல்வது தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி, எம்.ஏ.சுமந்திரன் அப்போது சபையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

இது தொடர்பான விவாதமொன்றை நடத்துவதற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த அவசரகால நிலையை நீக்கி, ஜனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## அமளிதுமளியால் சபை ...

விளக்கமளித்து முடிந்ததவுடன், எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார கருத்து தெரிவிக்க ஆரம்பித்தார். எனினும், அவர் சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவிக்கையில் சபாநாயகர் குறுக்கிட்டு, நீங்கள் சட்டவிரோதமான முறையில் நடந்துகொள்கின்றீர்கள் உங்களுடைய பேச்சை நிறுத்திவிட்டு, அமருங்கள் என பலமுறை எச்சரித்தார்.

எனினும், அவர் அதனைப் பொருட்படுத்தாமல் செயற்பட்டமையினால் சபையை 10 நிமிடம் ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

10 நிமிடத்துக்கு பின்னர் சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதும் மீண்டும் கோ ஹோம் கோட்டா என எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டன. அத்தோடு, சபையின் மத்திக்கு வந்து போராடியதால் இரண்டாவது முறை சபை நடவடிக்கைகளை 5 நிமிடம் ஒத்திவைத்தார் சபாநாயகர். அதன்படி, நேற்றைய சபை அமர்வுகள் இருமுறை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கோ ஹோம் கோட்டா...

கோ ஹோம் கோட்டா எனக் கூறுவதை ஏற்றுக் கொண்டு ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இவர்களின் வலியுறுத்தலுக்கு மத்தியில் நாட்டின் நிலைமை குறித்து முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன விளக்கமளித்து உரையாற்ற ஆரம்பித்தார். இவர் தன்னுடைய உரையை ஆரம்பிக்கும்போது, எதிர்க்கட்சியினர் கோ ஹோம் கோட்டா என எழுதிக் கொண்டுவந்த பதாகைகளை ஏந்தி, “கோ ஹோம் கோட்டா” எனக் கோஷமிட ஆரம்பித்தனர்.

அத்தோடு, மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்றும், “கப்புட்டா கா.. கா..” என்றும் உறுப்பினர்கள் பலத்த கோஷமிட்டனர். இவர்களின் கோஷத்திற்கு மத்தியில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன, தன்னுடைய உரையை ஆற்றிக்கொண்டிருந்தார். இதையடுத்து, இருந்த இடத்திலிருந்து கோஷம் எழுப்பிய உறுப்பினர்கள், சபையின் மத்திக்கு வந்து கோஷமிட ஆரம்பித்ததுடன், உரையாற்றிக் கொண்டிருந்த பந்துல குணவர்தனவின் முன்னாள் சென்று “கோ ஹோம் கோட்டா” எனக்கோஷமிட்டனர்.

இதையடுத்து, ஆளுந்தரப்பு எம்.பிக்கள் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவை சுற்றிவளைத்து பாதுகாப்பு வழங்கினர். எனினும், எதிர்க்கட்சியினர் தாங்கள் கொண்டு வந்த பதாகைகளை ஏந்தி “கோ ஹோம் கோட்டா” என சபைக்கு மத்தியில் வந்து போராடிக் கொண்டிருந்தனர்.

இதையடுத்து, உரிய இடத்தில் அமருமாறு சபாநாயகர் வலியுறுத்திய போதிலும், உறுப்பினர்கள் சபையின் மத்தியில் நின்று போராடிக் கொண்டிருந்தமையால் சபாநாயகரால் சபை நடவடிக்கைகள் 5 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டன.

## இலக்கத்தகடுகளற்ற...

வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக இருநாள் விவாதத்தின் முதல் நாள் விவாதம் நேற்று சபாநாயகர் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அவசரகால சட்டம் அமுல்படுத்தியதற்கு தெளிவான விளக்கம் வேண்டும். தேசிய பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்பட்டதா அல்லது பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக தகவல்கள் கிடைத்தா அல்லது நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்பட்டதா? எந்த தேவைக்காக அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்தோடு, சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டது ஏன் என்பதையும் விளக்கவேண்டும். நாட்டில் இன்று நிதி அமைச்சர் இல்லை. அமைச்சுப் பதவியை ஏற்று, நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பித்த பின்னர் நிதி அமைச்சர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துள்ளார். அதேபோன்று, கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது திறைசேரி செயலாளர் பதவிவிலகினார். ஆகவே, தற்போது நாட்டில் யார் நிதி அமைச்சர், யார் திறைசேரி செயலாளர் என்பதைக் கூறவேண்டும். நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளபோது நிதி தொடர்பான விடயங்களை யார் கையாள்வது, இதற்கு எங்களுக்கு பதில்வேண்டும்.

அதேபோன்று, நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்ற வளாகத்தில் பொதுமக்கள் அமைதியான முறையில் போராட்டம் நடத்தினர். இந்த அமைதியான போராட்டத்திற்கு மத்தியில் முகக்கவசம் அணிந்த, சீருடை அணிந்த, பதியப்படாத மோட்டார் வாகனங்களில் ஆயுதமேந்தி வந்தவர்கள் போராட்டக்காரர்களின் இடங்களுக்குச் சென்று விவாதத்தில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. நீங்கள் யார், எங்கிருந்து வந்தீர்கள் எனப் பொலிஸார் விசாரித்துள்ளனர். உண்மையில் அந்த இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் யார், முகக்கவசத்துடன் வந்தவர்கள் யார், அது வேறொரு குழுவினரா, இரகசிய இராணுவமா என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினையால் எரிபொருள், எரிவாயு, சீனி, பால்மா, பருப்புக்கு என அனைத்திற்கும் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளன. ஆனால், பண்டோரா பத்திரிகையில் கூறியுள்ள இந்த நாட்டின் டொலரை சூறையாடியதைப் பெற்றுக்கொண்டால் டொலர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு கிடைக்கும். அந்த சொத்து இருக்கும் நாட்டிலிருந்து அவற்றை இலங்கைக்கு கொண்டுவரவும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கும் நாங்கள் சட்டத்தை உருவாக்குவோம். அதுவே, நாட்டைக் கட்டியெழுப்பும் வழியாகும். அதனூடாக அங்குள்ள டொலர்களை இங்கு கொண்டுவந்தால் நாட்டில் டொலர் பிரச்சினை ஏற்படாது. இதனால், உணவுத் தட்டுப்பாடோ, மருந்து தட்டுப்பாடோ ஏற்படாது. அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் - என்றார்.

## பாடசாலை கற்பித்தல்...

ஆரம்பமாகும் புதிய தவணையிலிருந்து பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலம் வரை நீடிப்பதற்கான தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுத்துள்ளது. இந்த ஆண்டுடன் (2022) தொடர்புடைய பாடத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு 139 நாட்கள் வரையறுக்கப்பட்ட கால அவகாசம் காணப்படுவதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலம் நீடித்து கற்பித்தலுக்கான காலம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த புதிய திட்டத்தாலும் பாடத் திட்டத்தை முழுமையாக உள்ளடக்க முடியாத நிலை ஏற்படுமாயின் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தும் சாத்தியம் காணப்படுவதாக தெரியவருகிறது.

## அரசியல் புரட்சியின்...

தீர்க்கமான ஒரு கட்டத்தில் (At a crossroad) என்ற மகுடத்தில் தீட்டப்பட்டிருக்கும் ஆசிரிய தலையங்கத்தை முழுமையாகத் தருகிறோம்.

இலங்கையில் பரந்தளவில் இடம்பெற்றுவருகின்ற மக்கள் கிளர்ச்சி பெருமுக்கியத்துவம் வாய்ந்த அரசியல் புரட்சி ஒன்றின் பரிமாணங்களை எடுத்திருக்கிறது. சகல இனத்துவ அடையாளங்களையும் கடந்த வெகுஜன சீற்றத்தினாலும் கூட்டுத் துணிவாற்றலினாலுமே அது முன்னெடுக்கப்படுகின்றது என்பது வெளிப்படையானது. இணக்கத்துக்கு அப்பாற்பட்ட இனப் பிளவுகளைக் கொண்டதாக முன்னர் காணப்பட்ட ஒரு நாட்டில் மாற்றத்தையும் நிவாரணத்தையும் வேண்டி ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கியிருக்கும் மக்கள், தங்களது அவலங்களுக்கு மெய்யான மூல காரணம், பொறுப்புக்கூறும் கடப்பாடு இல்லாமல் பிரம்மாண்டமான அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் அரசியல் தலைமைத்துவமே என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை தோன்றுகிறது.

முற்றுமுழுதான ஆட்சி மாற்றத்தையே தவிர, இடைக்கால ஏற்பாடுகளை மக்கள் கோரிநிற்கவில்லை. மக்கள் கிளர்ச்சி மேலும் தீவிரமடைந்துகொண்டிருக்கும் வேளையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகமும் அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமும் மக்களின் ஆதரவையும் அரசியல் நேச அணிகளின் நம்பிக்கையையும் இழந்துவிட்டது போல தோன்றுகிறது.

பல கட்சிகளைக் கொண்ட அமைச்சரவையை அமைப்பதற்கு முன்வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்துவிட்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற முக்கிய நேச அணிகள் ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டன. புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சரும் பதவியை பொறுப்பேற்பது விவேகமானதல்ல என்று கைவிட்டு விட்டார்.

ராஜபக்ஷ சகோதரர்களின் பதவிவிலகலைத் தவிர வேறு எதுவும் மக்களின் சீற்றத்தை தணிக்காது என்பது தெளிவாகத் தெரியவந்திருக்கும் நிலையில், அரசியல் முனையில் வழமைக்கு மாறான ஒரு முட்டுக்கட்டை காணப்படுகிறது. ஆனால் அதேவேளை, சமாளிக்கவே முடியாததாக தோன்றுகின்ற பொருளாதார நெருக்கடியொன்றுக்கு மத்தியில் எவராவது ஆட்சியை பொறுப்பேற்க முன்வருவார்களா என்பது தெளிவில்லை. 40க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கூட்டணியில் இருந்து வெளியேறியிருக்கும் நிலையில் தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகிறது. மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்க எதிர்க்கட்சி தயாராயிருக்கிறதா என்பது மெய்யான ஒரு கேள்வியாகும்.

நிலைவரத்தின் அவசரம் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது. சர்வதேச கடனுதவி வழங்குநர்களை அணுகுவதற்கும் பெரும்பாக பொருளாதார உறுதிப்பாட்டை கொண்டுவருவதற்கும் பொருளாதார மீட்சிக்கான திட்டம் ஒன்று நாட்டுக்கு தேவைப்படுகிறது. இதற்கு நாட்டு மக்களின் நலன்களில் அக்கறைகொண்டதும் பொறுப்புக்கூறக்கூடியதுமான அரசாங்கம் ஒன்று பதவியில் இருக்கவேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துவதற்கான ஏற்பாடுகளைப் பொறுத்தவரை மறுசீரமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படவேண்டிய அதேவேளை இலங்கைக்கு சமகால இடர்பாடுகளைச் சமாளிக்க குறுகியகால கடனுதவி தேவைப்படலாம் என்று பொருளாதார நிபுணர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள். ஆனால் நம்பகத்தன்மையான தலைமைத்துவம் ஒன்று ஏற்படுவதிலேயே சகலதும் தங்கியிருக்கிறது. இலங்கை தீர்க்கமான ஒரு கட்டத்தில் நிற்கிறது. ஒரு வழியில் போனால் கடன்பொறியில் மாட்டுப்படவேண்டி வரலாம்.கடன்செலுத்த இயலாத நாடாகி வங்குரோத்து நிலையை அடைய வேண்டிவரும். மறுபுறத்தில் தற்போதைய அமைதியின்மை அரசியல் மற்றும் நிர்வாக மட்டங்களில் பாரிய மாற்றத்துக்கான அதிவிசேடமான வாய்ப்பை வழங்குகிறது.

பிரம்மாண்டமான அமைச்சரவையைக் கொண்ட பருமனான அரசாங்கம், மிதமிஞ்சிய பாதுகாப்புச் செலவீனம், அதிகாரத்தில் உள்ளவர்களின் ஊதாரிச் செலவுகள், உள்நாட்டு உற்பத்தியில் கவனம் செலுத்தாமை மற்றும் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறையில் மத்தியமயப்படுத்தல் ஆகியவை எல்லாம் சேர்ந்தே இன்றைய குளறுபடிகளுக்கு பங்களிப்புச் செய்திருக்கின்றன. இவை எல்லாம் முற்றாக மாறவேண்டும்.

அரசியல் மற்றும் பொருளாதாரத் தோல்விகளை மூடிமறைக்க பெரும்பானமையினவாத அணிதிரட்டலுக்கு இனிமேலும் அனுமதிக்கக்கூடாது. சகல தரப்புகளையும் அரவணைக்கின்ற நோக்கு வளர்க்கப்பட வேண்டும். இனம், மதம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளை மையமாக வைத்து வாக்களிப்பது ஆளும் வர்க்கத்துக்கு மாத்திரமே உதவுகிறது. தங்களுக்கு அதனால் எந்தப் பயனும் இல்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அரசியல் மற்றும் சமூக மட்டங்களில் ஏற்படக்கூடிய ஒரு முக்கியமான மாற்றமே அவர்களின் பொருளாதார விமோசனத்துக்கு வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பைத்தியம் எனக்கா?...

**யோ.தர்மராஜ்**

மனித கொலைகாரரை ஜனாதிபதி கதிரையில் வைத்துக்கொண்டு, நாங்கள் சுதந்திரமாக செல்ல முடியாது. எனவே, நாங்கள் தனக்குத்தானே எங்களது பாதுகாப்பை உறுதிசெய்துள்ளோம். நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும் முன், நான் வெளியே வருவதாக தோழர்களிடம் தெரிவித்தேன். உங்களில் சிலர் நில்லுங்கள் என்றேன். அதன்படி அவர்கள் இருந்தனர். நான் நாளையும் அப்படியே செய்வேன். எமது உயிரை பறிக்க இடமளிக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் கருத்து தெரிவித்துக் கொண்டிருக்கும்போது தனது வாகனத்தில் வெளிநபர் ஒருவர் நுழைந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில், நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு பல விடயங்களை சபையில் முன்வைத்தார். இதனை நாடாளுமன்றத்திற்கு முன்புள்ள மக்களிடமும் அநுராதபுரத்தில் சுற்றுவட்டத்தில் குவிந்துள்ள மக்கள் மத்தியிலும் சென்று கூறினால் அடிமட்டத்தின் நிலைமை புரியும். சபைக்குள் பாதுகாப்பாக இருந்துகொண்டு இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியும். உங்களின் மூளையிலுள்ள விடயத்திற்கும் அடிமட்டத்திலுள்ள நிலைமைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

நாடாளுமன்றத்தில் 2.30 மணிக்கு கட்சித் தலைவர் கூட்டம் இருந்தது. ஆனால், 3 மணிக்கு எனக்கொரு வேலை இருந்ததால் நாடாளு மன்றத்திலிருந்து செல்ல வேண்டியிருந்தது. அது என்னுடைய உரிமையும் கூட. நான் செல்லும் நேரத்தையும் சபைக்கு வரும் நேரத்தையும் ஆளுந்தரப்பு கொறடாவிற்கோ அல்லது சபாநாயகருக்கோ முடிவெடுக்க உரிமையில்லை.

அதன்படி, நான் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறியபோது சில ஆர்ப்பாட்டக்காரர்கள் இருந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் எனது வாகனத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் மறித்து மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்து பெற்ற வாகனத்திலேயே நீங்கள் செல்கின்றீர்கள் எனக் கூறினர். வாகனத்திற்குள் யார் இருக்கின்றார் என்பதை பார்த்து பேசுங்கள் எனக்கூறி முன்னேறினேன். எனினும், மீண்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் என் வாகனத்தை மறித்தால் நான் வாகனத்தை நிறுத்தினேன்.

பின்னர், இந்த நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்தவர்கள், ஊழல் மோசடிக்கார்கள் நாட்டை விட்டுச் செல்வதாகக் கூறினர். கடந்த 10, 15 வருடங்களுக்கு முன்னர் நான் கூறியதை தான் நீங்கள் இன்று கூறுகிறீர்கள் என நான் அவர்களிடம் கூறினேன்.

கடந்த காலத்தில் பொதுமக்களுக்கு இராணுவம் செய்த வியாபாரம், அவன்கார்ட் பிரதானி வழங்கப்பட்டது குறித்தும் நான் சபையில் கேள்வி எழுப்பினேன். கடற்படையின் சின்னையா என்பவர் 2018 ஊடக சந்திப்பை நடத்தி, கடற்கரை சேவையை கடற்படை பொறுப்பேற்றதும் 800 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார். அது அவன்கார்ட் முதலாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த வாரம் இடம்பெற்ற மிரிஹான சம்பவத்தின்போது, பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் அவன் கார்ட் பிரதானி உள்ளிட்டோர் அவசரமாகக் கூடினர். இதன்போது, மிரிஹான சம்பவத்திற்கு 200 பேர் அனுப்பியுள்ளதால் அச்சமடையத் தேவையில்லை என அவன்கார்ட் பிரதானி நிசங்க சேனாதிபதி தெரிவித்துள்ளார். அவர் இன்று நாட்டைவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இதனால், நாட்டின் சொத்துக்களை சூறையாடுவோரை தப்பிச்செல்ல இடமளிக்கவேண்டாம் என்றும் உங்களுடைய போராட்டத்தை கைவிட வேண்டாம் என்றும் அவர்களிடம் கூறினேன். கொள்ளையர்களால் இளைஞர்கள் வேலையில்லாதிருப்பதால் போராட்டத்தை முன்னோக்கி கொண்டுச் செல்லுமாறுக் கூறினேன். ஆனால், நான் தாக்குமாறு கூறியதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறியுள்ளார். அவ்வாறு நான் கூறவில்லை. இதுவே என்னுடைய பதிலாக இருந்தது.

குறிப்பாக, இந்த நாட்டில் பட்டப்பகலில் படுகொலைகள் நடந்தன. லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டார். ஆனால், இன்று கொலைக்காரன் இல்லை. தாக்குதல் நடத்தியவர்கள் கைதுசெய்யப்படவில்லை. இவையெல்லாம் நடக்கும் போது நாட்டின் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, இன்று இந்த நேரத்தில் ஜனாதிபதியாக இருக்கின்றார். அவர் பாதுகாப்புச் செயலாளராக இருந்து அவர் செயற்பட்ட விதம் தொடர்பான அனுபவம் நமக்கு உண்டு.

எனவே, நாங்கள் தனக்குத்தானே எங்களது பாதுகாப்பை உறுதிசெய்துள்ளோம். நாங்கள் சுதந்திரமாக பாதையில் செல்கிறோம் என்று நினைக்கிறீர்களா? மனித கொலைகாரரை ஜனாதிபதி கதிரையில் வைத்துக்கொண்டு, நாங்கள் சுதந்திரமாக செல்லமுடியாது. எனவே, ஒவ்வொரு முறை நான் வாகனத்தில் செல்லும்போதும் எங்கள் கட்சித் தோழர்கள் பலர் சுற்றி இருந்து பாதுகாப்பு வழங்குகிறார்கள். இதுவே எங்களுடைய கட்சியின் செயற்பாடாகும். இதனாலேயே நுகேகொடை சம்பவத்தின்போது சிலரை கைதுசெய்ய முடிந்தது.

நாங்களும் பாதுகாப்புடன் நடந்துகொள்கிறோம். நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும் முன் நான் வெளியே வருவதாக சகோதரர்களிடம் தெரிவித்தேன். உங்களில் சிலர் நில்லுங்கள். அதன்படி இருந்தனர். நான் நாளையும் அப்படியே செய்வேன். எமது உயிரை வீணாக விட முடியாது.

வாகனத்தில் செல்லும்போது விபத்தை ஏற்படுத்தி எமது உயிரை பறிக்க இவர்கள் நினைக்கக்கூடும். அதனால் ஒரு சில இராணுவ மோட்டார் சைக்கிள்கள் எனது பாதுகாப்பிற்கு இருந்தன. தலைக்கவசத்துடன் ஒருவர் வந்து காரில் ஏறினார். அவர் எனது பாதுகாவலர். மழை காரணமாக அவரை எனது காரில் ஏற்றினேன். என்ன தவறுள்ளது. நான் உரையாற்றும்போது ஆளுங்கட்சியிலுள்ளோர் என்னை பைத்தியக்காரன் என்கின்றனர். ஆனால் 2 கோடி மக்கள் ஜனாதிபதிக்கே பைத்தியம் என்று கூறிவருகின்றனர். அது இவர்களுக்கு புரியவில்லை – என்றார்.

# இரு நாட்களில் நாடு முழுவதும் 666 போராட்டங்கள் முன்னெடுப்பு

இரு நாட்களில் நாடு முழுவதும் 666 போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதனடிப்படையில் நேற்றுமுன்தினம் (05) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 96 போராட்டங்கள் பொதுமக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் கடந்த 04 ஆம் திகதி நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் 570 போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு கண்டியில் நடைபெற்ற போராட்டத்தில், ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க முற்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நான்குபேர் காயமடைந்துள்ளனர். கண்டி, அனிவத்த பகுதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவின் வீட்டை தாக்குவதாகக் குறிப்பிட்டு அங்கு செல்ல முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை தடுக்க முற்பட்ட பொலிஸாரே தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களால் பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.



ராஜகிரியவில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு முன்பாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமொன்று ஆயுர்வேத வைத்தியசாலை பணியாளர்களால் நேற்று (06) முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

## நாட்டின் மின் நெருக்கடியால் புகையிரதக் கடவை தடுப்புகளை முறையாக செயற்படுத்துவதில் சிரமம்

நாடளாவிய ரீதியில் பெரும்பாலான புகையிரதக் கடவை தடுப்புகளை முறையாக செயற்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக ரயில் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் டி.ஜீ.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் தற்போது நிலவும் மின் நெருக்கடி காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இயங்கி வரும் பெரும்பாலான புகையிரதக் கடவைகளில் ஒலி, ஒளி தடுப்பு அமைப்புகளே காணப்படுவதாகவும், மின்வெட்டு நேரங்களில் அவற்றைச் சரியாகச் செயல்படுத்த முடியாதுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்கலங்களைப் பயன்படுத்தி அவற்றை இயக்க முடியும் என்றாலும், நீண்டகால மின்வெட்டின்போது மின்கலங்களைக் கொண்டு இயக்குவது கடினமானது என்று ரயில் திணைக்கள பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக புகையிரதக் கடவைகளை கடக்கும்போது பயணிகள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐஸ் போதைப் பொருளுடன் வவுனியாவில் இருவர் கைது

**(வவுனியா செய்தியாளர்)**

வவுனியாவில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் நேற்று முன்தினம் (05) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, குருமன்காடு பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மணிபுரம் பகுதியைச் சேர்ந்த 31 வயது மற்றும் 21 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்தது

நாட்டில் தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

செட்டியார் தெருவில் நேற்றைய நிலவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 190,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று, 175,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, கடந்த வாரத்தில் 24 கரட் தங்கம், பவுண் ஒன்று 200,000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெயர்மாற்றம்

**கற்பிட்டி வன்னிமுந்தலில் வசித்து வரும் "முஹம்மது அபூபக்கர் நஸ்ஹான்" ஆகிய நான் எனது பெயரை 2022ஆம் ஆண்டு முதல் "முஹம்மது நசீர் நஸ்ஹான் "(Mohammadhu Naseer Naskhan) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.**

**முஹம்மது நசீர் நஸ்ஹான்-**
**(Mohammadhu Naseer Naskhan)**




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தத்தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டுமென வலியுறுத்தி அனைத்து அரச ஊழியர்களும் பங்கேற்கும் பாரிய வேலைநிறுத்தம் ஒன்றை முன்னெடுப்பது குறித்து அரச துறையில் உள்ள தொழிற்சங்கங்கள் தற்போது கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவி விலகலுக்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் பல விடயங்களை முன்வைத்து மேற்படி வேலைநிறுத்தம் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக முன்னணி பொதுச் சேவை தொழிற்சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"தற்போதைய நெருக்கடிக்கு அரசியல் அதிகாரிகள் தீர்வுகாணத் தவறியதற்கு எதிராக, பல கட்டங்களாகப் போராட்டம் நடத்த அரச ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர். அதன்படி, மூன்றாம் கட்டமாக நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தை முன்னெடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, நெருக்கடி நிலைமைக்கு அரசாங்கம் விரைவான தீர்வை வழங்குமாறுகோரி, அனைத்து அரச ஊழியர்களும் நேற்று (06) பிற்பகல் உணவு இடைவேளையின்போது மௌனப் போராட்டத்தை நடத்தியுள்ளதாக இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் 247,000 ஆசிரியர்களும் 16,000 அதிபர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கு முன்பாக போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். நேற்றும் பல இடங்களில் இதேபோன்ற ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

கடந்த சில மாதங்களாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றைக் கண்டித்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அண்மைக்காலமாக இந்தப் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பதவி விலகக்கோரி நாடளாவிய ரீதியில் தற்போது போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, 600,000 அரச உத்தியோகத்தர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சங்கம், அரச நிறுவனங்களில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்காவிடின் எதிர்காலத்தில்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 07ஆம் திகதி, வியாழக்கிழமை

# மோசமடையவுள்ள நாட்டு நிலைமை!

கடமைகளில் இருந்து விலக நேரிடும் என எச்சரித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கை நாளுக்கு நாள் தீவிரமடைந்து மக்கள் வீதியில் போராடிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டை மேலும் நெருக்கடி நிலைமைக்கு தள்ளப்போகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டுமென்று தொடர்போராட் டங்கள் நடத்தப்பட்டாலும், எக்காரணத்தை கொண்டும் அவர் பதவி விலகப்போவதில்லையென்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி விலகல் என்பது இலகுவாக நடந்தேறக்கூடிய விடயமல்ல. நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது, நாட்டின் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சித் தலைவர்களால் இரண்டு தீர்வுகள் முன்வைக்கப்பட்டன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றத்தின் ஊடாக நியமிக்க வேண்டும் அல்லது இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பதே இரண்டு முன்மொழிவுகளாகும் என சபாநாயகர் இந்த கூட்டத்தின்போது தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்தப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியலமைப்பில் இடமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த கூட்டத்தின்போது குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டாலும், அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதால் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் அது சாத்தியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறி இப்போது அது அரசியலமைப்பு நெருக்கடியாக மாறியிருக்கிறது. ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வது அல்லது ஜனாதிபதி அவரது பதவியிலிருந்து நீங்குவது என்பது அரசியலமைப்பு நெருக்கடியாக உருவாகியிருக்கிறது. இந்த நெருக்கடி இப்போது நீங்குவதாக தெரியவில்லை.

இவ்வளவு நெருக்கடிகள் நாட்டில் இருந்தாலும் அதனை பொருட்டாக கொள்ளாத அரசாங்க அமைச்சர்கள், நாடாளுமன்றத்தில் நேற்று பேசுவதென்ன? மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவின் வாகனத்தில் சென்றது யார், அவர் எங்கே இறங்கினார், அவர் ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் ஒருவரா? என்றெல்லாம் கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்பும் அரசாங்க அரசியல் பிரமுகர்கள், மக்களின் பிரச்சினைகளை பேச மறந்தது ஏன்?

எரிபொருள் இல்லாமல், சமையல் எரிவாயு இல்லாமல், அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமல் மக்கள் வீதிகளில் அந்தரித்துக்கொண்டிருக்கும் நிலையில், முழு நாடே ஸ்தம்பித்துள்ள நிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் அரசாங்கத் தரப்பு செயற்படுவது நிலைமையை மேலும் மோசமாக்கவே போகிறது.

# சர்வாதிகார நாடாகிறதா இலங்கை?




இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகக் கோரி பொதுமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். கடந்த மார்ச் 31ஆம் திகதி முன்னிரவில் கொழும்பு, மிரிஹானையில் உள்ள ஜனாதிபதி மாளிகையைச் சூழவும் பொதுமக்கள் தமது கைக்குழந்தைகளையும் சுமந்துகொண்டு மெழுகுதிரிகளையும், ஜனாதிபதியைப் பதவி விலகக் கோரும் பதாகைகளையும் ஏந்திக்கொண்டு அமைதியாகப் போராடிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ஆயுதங்களோ தடிகளோ இருக்கவில்லை.

எந்தக் கட்சியையும் சாராமல் சுயமாக ஒன்றுசேர்ந்த அந்த மக்கள் கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர்ப் புகைகுண்டுகளையும், துப்பாக்கி வேட்டுகளையும் பயன்படுத்தியது இலங்கை பொலிஸ். ஜனாதிபதியின் இல்லத்துக்குச் செல்லும் பாதைக்குக் குறுக்காக ஒரு பஸ் நிறுத்தப்பட்டு, அதை இனம்தெரியாத ஒருவர் பற்ற வைக்கும் காணொளிகளும், பொலிஸ் வாகனம் ஒன்றைப் பற்ற வைக்கும் காணொளிகளும் சர்வதேச ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பரவத் தொடங்கின.

உடனடியாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு, 'தீவிரவாதிகள் ஒன்று கூடித் தாக்குதல் நடத்தினர் என்று அறிவிக்க, பொலிஸாரும் இராணுவமும் அங்கிருந்த மக்களைக் கண்மூடித்தனமாகச் சுடவும் தாக்கவும் கைதுசெய்யவும் தொடங்கின. அந்த வாகனங்களைப் பற்ற வைக்கும்போதோ, அவை பற்றி எரியும்போதோ பொலிஸாரோ இராணுவமோ அவற்றை அணைக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு நாளைக்கு 15 மணித்தியாலங்களுக்கும் மேலான மின் தடை காரணமாக மருத்துவமனைகளில் அவசர அறுவை சிகிச்சைகள் பலவும் கைபேசி வெளிச்சத்தில்தான் செய்யப்படுகின்றன எனும்போது, இலங்கையில் தற்போது மக்கள் எதிர்கொண்டிருக்கும் நிலையின் தீவிரம் விளங்கும். பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு இல்லாமல் நாட்டில் எதுவும் இயங்குவதில்லை. போதாதற்கு அத்தியாவசிய உணவுகளின் தட்டுப்பாடு மக்களின் கழுத்தைப் பட்டினியால் நெரித்துக்கொண்டிருக்கிறது.

தற்போது தெருக்களில் ஒன்றுகூடும் பொதுமக்களின் மனங்களில் ஓரேயொரு நோக்கம்தான் இருக்கிறது. பட்டினியற்ற, சுமுகமாக உயிர் வாழத் தேவையான சூழலுடன் கூடிய, வரிசைகளில் பொதுமக்கள் விழுந்து மரணிக்காத அமைதியான நாடொன்றுதான் அவர்களது இலக்கு. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடிக்கு முதலில் பொறுப்புக் கூற வேண்டியவர், நாட்டின் ஜனாதிபதிதான். உண்மையில், கோட்டாபயவை ஜனாதிபதியாக ஆக்க 69 இலட்சம் வாக்குகளை அளித்த மக்களிடையே ஜனாதிபதி மீது மூன்று விதமான நம்பிக்கைகள் இருந்தன. அவர்தான் முப்பதாண்டு கால யுத்தத்தை வென்றார் என்பது ஒன்று. இரண்டாவது, சிங்கப்பூரை ஒப்பிட்டு நகர அபிவிருத்தி தொடர்பாக அவர் முன்வைத்த வாக்குறுதிகள். மூன்றாவது, அவர் முன்னர் அரசியல்வாதியாக இருக்கவில்லை என்பதால், தைரியமாகவும் நேர்மையாகவும் ஆட்சி நடத்துவார் என்பது.

ஒரு நாட்டை ஆள்வதற்கு இந்தத் தகுதிகள் போதுமானவையா என்று மக்கள் அப்போது யோசிக்கவில்லை. ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் கொள்கை என்பது, இனவாதத்தையும் மதவெறியையும் பரப்பி, சர்வாதிகார ஆட்சியை மேற்கொள்வது அல்லாமல், நாட்டை முன்னேற்றுவது அல்ல என்பதை அப்போது மக்கள் அறிந்திருக்கவில்லை. அந்தக் குடும்பத்தின் பொருளாதாரக் கொள்கை என்பது, இயன்ற அளவு ஊழல்களைச் செய்து, தமது குடும்பத்துக்குத் தேவையான சொத்துகளைச் சேர்த்துக்கொள்வதுதான் என்பதையும் மக்கள் அப்போது அறிந்திருக்கவில்லை.

அந்தக் குடும்பத்தின் வாரிசு ஒருவர் கடந்த மாதம் மக்கள் பணத்தில் 35 இலட்சம் ரூபா செலவழித்து, ஓவியம் ஒன்றை வாங்கியிருக்கிறார் எனும்போது, இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணம் உங்களுக்கு விளங்கும். ஜனாதிபதி ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு வருட காலத்துக்குள் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டிருந்த கொலைகாரர்களும் ஊழல்வாதிகளுமான அரசியல்வாதிகள் அநேகமானவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ததோடு, அவர்களுக்கு உயர் பதவிகளையும் வழங்கியுள்ளார். இவ்வாறாக, ஜனாதிபதி மீது வைத்திருந்த நம்பிக்கைகள் அனைத்தும் இப்போது முழுமையாகப் பொய்த்துப்போயுள்ள நிலையிலேயே மக்கள் தெருவில் இறங்கியிருக்கிறார்கள்.

ஏப்ரல் 03ஆம் திகதி நாடு முழுவதிலும் உள்ள இலட்சக்கணக்கான பொதுமக்கள் தெருவில் இறங்கிப் போராட்டம் நடத்தப்போகும் தகவல் தெரிய வந்தவுடனேயே இரண்டாம் திகதி மாலை ஆறு மணியிலிருந்து திங்கட்கிழமை காலை ஆறு மணி வரை ஜனாதிபதி நாடளாவியரீதியில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்திருந்தார். நாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்படும் அனைத்துச் சமூக வலைதளங்களையும் முடக்கினார்.

தொடர்ந்து தனக்கு எதிராகக் கிளம்பியுள்ள இவ்வாறான எதிர்ப்புகளைக் கண்டு பதற்றமுற்ற ஜனாதிபதி கோட்டாபய, இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், அவசரகாலச் சட்டத்தை நாட்டில் பிரகடனப்படுத்தி, அதிவிசேட அரசாங்க அறிவித்தல் ஒன்றை வெளியிட்டதோடு, அந்தச் சட்டத்தைப் பிரயோகித்து அறுநூறுக்கும் அதிகமான பொதுமக்களைக் கைதுசெய்ய உத்தரவிட்டார்.

இந்த அவசரகால நிலையின்போது, மக்கள் ஒன்றுகூடுவதற்கான, கருத்துகளைத் தெரிவிப்பதற்கான, ஒரு குழுவாகச் சேர்வதற்கான, நடமாடுவதற்கான, தொழில்புரிவதற்கான உரிமைகளும், சமயம், கலாசாரம், மொழி ஆகியவற்றுக்கான உரிமைகளும் மட்டுப்படுத்தப்படுகின்றன. அத்தோடு, பிடியாணை இன்றியே எவரையும் கைதுசெய்யும் அதிகாரமும், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சந்தேக நபர்களை எவ்வளவு காலமும் தடுத்து வைக்கலாம், சந்தேக நபர்களின் வாக்குமூலங்களை சாட்சிகளாகப் பயன்படுத்தலாம், தேடுதல் ஆணை இல்லாமலே எந்த இடத்திலும், எந்தக் கட்டிடத்திலும் தேடுதல்களை பொலிஸார் மேற்கொள்ளலாம்.

எவரினதும் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளை அரசுக் கட்டுப்பாட்டில் எடுக்கலாம். அதுமட்டுமின்றி, சந்தேக நபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளையும், தேவையான விசாரணைகளை மேற்கொள்ளவும் இராணுவப் பாதுகாப்புப் படைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அத்தோடு, சட்டமா அதிபரின் அனுமதியின்றி, சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கவோ, விடுதலை செய்யவோ நீதவானுக்கு அதிகாரமில்லை என்பது போன்ற சர்வாதிகார விதிமுறைகள் அந்த அதிவிசேட அரசாங்க அறிவித்தலில் காணப்படுகின்றது.

இலங்கை குறித்து சர்வதேச அளவில் எழுந்திருக்கும் அழுத்தங்கள் மற்றும் தனக்கு எதிரான மக்களின் எதிர்ப்பைத் தடுத்து நிறுத்தவே ஜனாதிபதியால் இவ்வாறெல்லாம் செய்யப்படுகின்றன என்பது எவருக்கும் விளங்கும். இலங்கையில், கடந்த பல தசாப்தங்களாகவே இயக்கங்களாலும், அரசியல் கட்சிகளாலும் வழிநடத்தப்பட்ட இலட்சக்கணக்கான தேசப்பற்று மிக்க இளைஞர்கள், இலங்கை அரசின் தீவிரவாத முத்திரையின் கீழ் உயிர்ப் பலி கொடுக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம்.

உண்மையில், தேசப்பற்று மிக்க இன்றைய இளைஞர் தலைமுறைக்கு, இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் வன்முறைகளையும் நெருக்கடிகளையும் தாங்கிக்கொள்ள முடியாதிருக்கிறது. வருங்காலத்தில் தேசத்தைப் பொறுப்பேற்கக் காத்திருப்பவர்கள் அவர்கள். பல தசாப்தங்களாக இலங்கை இழந்துகொண்டிருக்கும் இளைஞர் சக்தி, அவர்களது பலம், உத்வேகம் ஆகியவற்றின் காரணமாகத்தான் ஊழல் மிகுந்த முதிய அரசியல்வாதிகள் இப்போதும் இலங்கையை ஆண்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடவில்லை.

எனவேதான், தெருவில் இறங்கித் தமது தாய்நாட்டைத் தற்போதைய ஆட்சியிலிருந்து மீட்க அமைதியாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் மீண்டும் மீண்டும் இளைஞர்களைப் பலி கொடுக்க நேர்ந்திருக்கும் கொடூரமான நிலையானது, இனியும் ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கால் நேருவதற்கு இடமளிக்கக் கூடாது.

**- எம்.ரிஷான் ஷெரீப்,**
**ஊடகவியலாளர்,**
**நன்றி - இந்து**

## தவக்கால சிந்தனை




### இயேசு, என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார்...

இயேசுவின் வாழ்க்கையில் துலங்கிய ஒரு முக்கியமான பண்பு அவர் எப்போதுமே கடவுளின் திருவுளத்திற்கு அமைந்து நடந்ததாகும். கடவுளிடமிருந்து வந்த இயேசு கடவுள் தன்மை கொண்டவராக இருந்தாலும், நம்மைப்போல் மனித இயல்பை ஏற்றுக்கொண்டார். கடவுள் அவருக்கு அளித்த பணியை நிறைவேற்றுவதில் இயேசு கண்ணும் கருத்துமாயிருந்தார். அவர் தம் சொந்த விருப்பப்படி செயல்படவில்லை. மாறாக, கடவுள் எதை விரும்பினாரோ அதையே இயேசுவும் தம் விருப்பமாகக் கொண்டிருந்தார்.

தம்மை அனுப்பிய கடவுள் தம்மோடு இருப்பதை இயேசு எப்போதுமே உணர்ந்திருந்தார். எனவேதான் இயேசு நற்செய்தி அறிவிப்புக்கு இடையிலும் கடவுளோடு தனித்திருந்து இறைவேண்டலில் ஈடுபட்டார். கடவுளுக்கும் இயேசுவுக்கும் இடையே நிலவிய ஆழ்ந்த உறவு அந்த இறைவேண்டல் நேரங்களில் இன்னும் அதிகமாக ஆழப்பட்டிருக்க வேண்டும்.

கடவுளோடு ஒன்றித்திருந்த இயேசு மனிதரோடும் தம்மை ஒன்றுபடுத்திக்கொண்டார். ஏன், மனிதருக்குக் கடவுளின் அன்பைக் கொடையாக வழங்குவதற்குத் தானே இயேசு வந்தார்? கடவுள் நம்மோடு இருக்கின்றார் எனும் உணர்வு நம்மில் ஆழப்பட வேண்டும்.

கடவுள் நம்மோடு இருப்பதால் நாம் கடவுளின் குரலுக்குச் செவிமடுப்பது தேவை. கடவுளின் குரலை நம் உள்ளத்திலும் வாழ்வு அனுபவத்திலும் நாம் கேட்டு உள்வாங்கும்போது அக்குரல் நம் இதயத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கும். இந்த அனுபவம் நம்மில் நிலைக்கும்போது நாமும் கடவுளுக்கு உகந்தவற்றையே செய்திட முன்வருவோம்.

## நக்கல் நமசிவாயம்

**உண்மையா சொல்லப்போனா இப்ப ராஜபக்சமார் பாவம் எண்டு சொல்லுறது தமிழ் ஆக்கள் தான்...**



## இன்றைய நாளில்...

- ★ 1876 – அலெக்சாண்டர் கிரஹம் பெல் தொலைபேசிக்கான காப்புரிமம் பெற்றார்.
- ★ 2007 – இந்தோனேசியாவின் யாகியகர்த்தா விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்த கருடா விமானம் வயல் ஒன்றில் வீழ்ந்து வெடித்ததில் 49 பேர் உயிரிழந்தனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இணைந்து மஸ்கெலியாவில் அரசுக்கு எதிராக போராட்டம்

ஆயிரம் ரூபா போலி வாக்குறுதியளித்ததாக எதிர்ப்புக் கோஷம்





(செ.தி.பெருமாள்)

பிரவுன்சீக், ஸ்ரஸ்பி, ஓல்ட்டன், பெயலோன், கவரவில உள்ளிட்ட தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக மஸ்கெலியாவில் நேற்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாமிமலை- மஸ்கெலியா பிரதான வீதி, கவரவில சந்தியிலும் மஸ்கெலியா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் பதாகைகளை ஏந்தியவண்ணம் பேரணியாக வந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் தருவதாக உறுதியளித்தபோதிலும் அது உரிய முறையில் கிடைக்கப்பெறவில்லையென தெரிவித்த மக்கள் போலியான வாக்குறுதிகளை வழங்கிய ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அரசாங்கம் பதவி விலகவேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 06.04.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 113 6043 | 124 2138 |
| கனேடியன் டொலர் | 127 1802 | 137 523 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 35 5312 | 37 684 |
| யூரோ | 216 6 83 | 228 601 |
| ஜப்பான் யென் | 1 3 62 | 1 4 85 |
| சிங்கப்பூர் டொலர் | 105 68 8 | 117 822 |
| ஸ்ரேலிங் பவுன் | 28 0487 | 3 3 6023 |
| சுவிஸ் பிராங்க் | 21 3015 | 222 4786 |
| ஐ.அ.டொலர் | 187 0 53 | 2 7 3440 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 705 23 8 |
| குவைட் | குவைட் தினார் | 0, 0 7 05 |
| ஓமான் | ஓமான் றியால் | 688 3307 |
| கட்டார் | கட்டார் றியால் | 73 1178 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 71 375 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 72 6855 |

# இலங்கை சுற்றுலாத்துறையின் வளர்ச்சி கருதி அவுஸ்திரேலியாவுடன் உடன்படிக்கை கைச்சாத்து



சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைத் துறையில் புத்தாக்க அபிவிருத்தி மற்றும் களக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான இரு தரப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி தீபா லியனகேயும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலியும் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சுடன் இணைந்து அவுஸ்திரேலிய உதவித் திட்டம் (S4IG) இலங்கையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் ஸ்திரத்தன்மைக்கும் அபிவிருத்திக்கும் தேவையான திறன்களை விருத்திசெய்யும் நோக்கத்துடன் 2020 – 2030 திறன் அபிவிருத்தி தசாப்தத்துக்கு இணையாக இத்திட்டத்தினை முன்னெடுக்கின்றது.

சுற்றுலாத்துறைக்கு ஏற்புடைய கொள்கையாக்கம், ஆண் பெண் சமத்துவம், ஆற்றல் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி போன்ற விடயங்கள் தொடர்பாக துறைசார்ந்த சகலருடனும் பரந்துபட்ட ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு இத்திட்டம் பெரும் பங்காற்றுவதாக இராஜாங்க அமைச்சர் சிறப்பு மருத்துவ நிபுணர் திருமதி சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் விடயங்கள் உள்ளடக்கப்பட்ட தொழில் கல்விக்கு இலங்கை முன்னுரிமை அளிக்க வேண்டுமெனவும் பொருளாதார வளர்ச்சி கருதி அதற்கு தொடர்ச்சியாக உதவியளிப்பதற்கு அவுஸ்திரேலியா நடவடிக்கை எடுப்பதாகவும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி தெரிவித்தார்.

(S4IG) இன் அடிப்படை நோக்கம், சுற்றுலாத் துறைக்கு ஏற்புடைய திறன் மற்றும் ஆற்றல்களை விருத்திசெய்து அரச மற்றும் தனியார்துறைக்கு தேவையான வளப் பங்களிப்பினை வழங்குவதாகும். சுற்றுலாத்துறைக்கு ஏற்புடைய கொள்கை மற்றும் திட்டமிடல் ஒருங்கிணைப்பு, தேசிய மற்றும் கிராமிய மட்டத்திலான சுற்றாடல் மற்றும் சுற்றுலா கட்டமைப்புகளை வலுப்படுத்தல், நுண், சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சிகள் துறைக்கு வாய்ப்புகளையும் தொழில்களையும் வழங்குவதன் மூலம் மக்கள் வாழ்க்கை முறையில் காத்திரமான வளர்ச்சியை ஏற்படுத்துவதே (S4IG) திட்டத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களின் எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதி சபாநாயகரின் இராஜினாமா ஜனாதிபதியால் ஏற்க மறுப்பு

பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகிய ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்க மறுத்துள்ளார்.

மேலும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை தொடர்ந்தும் பேணுமாறு அவரிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் (05) கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பிரதி சபாநாயகர் பதவி சுயாதீனமான பதவி என்பதனால் தற்போதைக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகளை தொடர்வது அத்தியாவசியமானது எனவும் அதற்கமைய இராஜினாமா கோரிக்கையை நிராகரிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சுயேச்சைக் குழுவாக செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்ததையடுத்து, பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலக தீர்மானித்ததாக ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

# தனிநபர் போராட்டங்கள் கம்பளையில் முன்னெடுப்பு





(சுரங்க ராஜநாயக்க)

அரசாங்கத்துக்கு எதிராக கம்பளையில் தனிநபர் போராட்டங்கள் நேற்று (06) முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடிக்கு கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமே காரணம் என சுட்டிக்காட்டி கம்பளை, தெல்பிட்டிய பகுதியில் விவசாயிகள் இவ்வாறு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

தெல்பிட்டியவில் வீட்டின் கூரையின் மீதேறியும் மாட்டுக்கொட்டிலுக்கு அருகிலும் தனிநபர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.







நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தற்போதைய அரசாங்கமே காரணம் எனத் தெரிவித்து உடனடியாக அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி குருநாகல் வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: அநுர ஜயந்த திசாநாயக்க)

# தென்கொரிய அரச கொள்கைகள் அமைச்சர் சபாநாயகருடன் சந்திப்பு



தென்கொரிய அரச கொள்கைகள் ஒருங்கிணைத்தல் அமைச்சர் யுன் சியோல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான கொரிய தூதுவர் ஜியோங் வூஜினும் கலந்துகொண்டார்.

தென்கொரிய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான இருதரப்பு தொடர்புகளை மேலும் வலுப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் பொருளாதார மற்றும் கலாசார மேம்பாட்டுக்கு தென்கொரிய அரசின் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவதாக தென்கொரிய அரச கொள்கைகள் ஒருங்கிணைத்தல் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். இலங்கை தற்பொழுது முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கு தீர்வுகாண தென்கொரியா உள்ளிட்ட நட்பு நாடுகளின் ஆதரவு அத்தியாவசியமானது என சபாநாயகர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் தென்கொரிய அரசியல் விவகார பிரதியமைச்சர் ரியூ டே யோங் உள்ளிட்ட பிரதிநிதிகளும் இலங்கை நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே.ஜயதிலக்கவும் கலந்துகொண்டனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



(தலவாக்கலை செய்தியாளர்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட வங்கி ஓயா இலக்கம் 1 பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார். அந்த வகையில் சுரேஸ்குமார் - சத்தியப்பிரியா தம்பதிகளின் புதல்வன் நிதர்சன் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் செ.மனோகர் மற்றும் மாணவனுக்கு பாடசாலை அதிபர் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

குருநாகல், குளியாப்பிட்டி கல்விவலய அல்-ஹுமைரா முஸ்லிம் வித்தியாலயத்தின் எம்.எவ்.அம்ரா பர்ஹத் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் எதண்டவெல வெளகம கிராமத்தைச் சேர்ந்த பர்னாஸ் - அஸ்ரா தம்பதிகளின் புதல்வியாவார்.





கொட்டகலை வர்த்தக சங்கம், சாரதிகள் சங்கம், முச்சக்கரவண்டி நலன்புச் சங்கம் ஆகியவற்றை சேர்ந்தோர் கொட்டகலை நகரில் அரசுக்கு எதிராக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: தலவாக்கலை செய்தியாளர்)

# சைவ மங்கையர் வித்தியாலயத்தில் மாணவத் தலைவிகள் தினம்









(அஷ்ரப் ஏ சமத்)

வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் மாணவத் தலைவிகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட மாணவத் தலைவிகள் தினம் கல்லூரி மண்டபத்தில் மாணவத் தலைவி நீலாதக்சி பிரியாதக்ஸன் தலைமையில் நேற்றுமுன்தினம் (05) நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக சிறைச்சாலைகள், அமைச்சின் மேலதிகச் செயலாளர் ரஞ்சனி நடராஜாபிள்ளை, கல்லூரி அதிபர் அருந்ததி ராஜவிஜயன், கல்லூரியின் முகாமையாளர் மாலா சபாரத்தினம் மற்றும் ஆசிரியைகள் ஏனைய பாடசாலைகளின் மாணவத் தலைவிகள் குழாமும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவிகளது சமூக நல உதவித் திட்டங்கள், ஹோப் எனும் ஆங்கில சஞ்சிகை வெளியீடு, இயற்கை புகைப்படப் போட்டி நிகழ்வுகள். பரதநாட்டியம், இசை, பாடல்கள் மற்றும் ஏனைய பாடசாலைகளுக்கிடையே நடத்திய சமூக நாடகங்கள், குருந்திரைப்படம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவத் தலைவிகளுக்கு அதிதிகளினால் பரிசும் வழங்கப்பட்டது. அத்துடன் மாணவத் தலைவிகள் தலைமைத்துவத்தினை எவ்வாறு நிர்வகித்தல், ஒழுக்கம், விளையாட்டு, கல்வி சமூக சேவை போன்ற தலைப்பில் பிரதம அதிதி அரவிந்த டி சில்வா அங்கு உரையாற்றினார்.

# நாடாளுமன்றத்தில் நேற்று...

## பதவி விலகுவது ஜனாதிபதியின் கையில்



ஹர்ஷன ராஜகருணா எம்.பி.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்கவின் வானத்தில் ஹெல்மட்டுடன் ஏறியது யார் என்ற கேள்வியுடன் சபையின் அரைவாசி நேரம் வீணடிக்கப்பட்டது. ஆனால், அதனை விட நாட்டில் இருக்கும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். வீதியிலுள்ள மக்கள் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

பிரச்சினைகளை கூறியபோதிலும் அதற்கு செவிசாய்க்காதமையினாலேயே மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். வரும் அனைத்து வாகனங்களிலும் ''கோட்டா கோ ஹோம்'' என்ற வாக்கியமே ஒட்டப்பட்டுள்ளன. இதற்குத் தீர்வை வழங்குங்கள். ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்து தங்களுடைய வேலைத்திட்டங்களை அறிவிக்க முடியும்.

பதவி விலகுவது ஜனாதிபதியின் கையிலேயே உள்ளது. அதனை நாடாளுமன்றத்திற்கு வழங்குவதில் என்ன பயனுள்ளது. ஜனாதிபதி பதவி விலகுவதை மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஆனால், இன்றும் 69 இலட்சம் மக்கள் அரசாங்கத்துடன் இருப்பதாகக் கூறுகின்றனர். அனைவரும் பாதையில் இருப்பதை மறந்துவிட்டனர்.

கோட்டா கோ ஹோம் என்பதை புரிந்துகொள்ளாமல் எவ்வாறு பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முடியும். நீங்கள் இந்த உலகத்திலா இருக்கின்றீர்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆடை அணிந்து கொண்டா இருக்கின்றார். தயவுசெய்து ஆட்சியிலிருந்து விலகி வீட்டுக்குச் சென்று நாட்டு பிரச்சினைக்குத் தீர்வை வழங்குங்கள்.

## அரசாங்கத்தின் கூலியாட்கள் சுற்றித் திரிகின்றனர்



நளின் பண்டார எம்.பி.

எதை விதைத்தார்களோ அதையே இன்று அறுவடை செய்கின்றனர். நாட்டில் பல இடங்களில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மிரிஹான சம்பவத்தில் பஸ்ஸுக்கு தீ மூட்டியது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? அதற்கு நீதி கிடைத்திருந்தால் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

இந்நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் சில மோட்டார்சைக்கிள்கள் சென்றன. அதற்கு அனுமதியுள்ளதாக இவர்கள் கூறுகின்றனர். அவன்கார்ட் சம்பவத்தில் பல ஆயுதங்கள் காணாமல்போயின. அவற்றை எடுத்துக்கொண்டு தற்போது மோட்டார்சைக்கிளில் வர முடியும். குறிப்பாக, அரசாங்கத்தினால் கூலிக்கு ஏவிவிடப்பட்டவர்கள் நாட்டில் பல பகுதிகளில் சுற்றித்திரிவதாக சாட்சியங்கள் உள்ளன. எனவே, சம்பவங்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். நாட்டில் பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் இல்லையென்றால் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னெடுத்த தந்திரோபாயங்களே இன்று பிழைத்துப்போயுள்ளன. ராஜபக்ஷக்களையே இன்று வெளியேறுமாறு மக்கள் கோருகின்றனர்.

இன்று ஜேவிபி மீது குற்றம் சுமத்துபவர்கள் அன்று ஜேவிபியினால் ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை மறந்துவிட்டனர். அன்று மஹிந்தவை கொண்டுவந்தனர். அவர் இன்று கோட்டாபயவை கொண்டுவந்ததால் "கோட்டா கோ ஹோம்'' என்ற நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

கடந்த இரு வருடங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அசமந்தப்போக்கினாலும் ராஜபக்ஷவின் அராஜக ஆட்சியினாலும் நாடு சீர்குலைந்துள்ளது. இதற்கு முன்னிருந்த எந்தவொரு ஜனாதிபதிக்கும் ஆட்சியை விட்டு வெளியேறுமாறு மக்கள் எதிர்ப்பு அலை உருவாகவில்லை. யுத்த காலத்தில் கூட அவசரகால மற்றும் ஊரடங்கு சட்டம் இருந்தது. எனினும், தனி குடும்பம் ஒன்றை பாதுகாக்க பயன்படுத்தவில்லை.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ ஆட்சியைவிட்டு வெளியேறமாட்டார் எனக் கூறினாலும் அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அவர் இருக்கும் வரை நாடு முன்னோக்கிச் செல்லாது.

## பிரதமர் பதவி விலகிவிட்டாரா?



விஜித ஹேரத் எம்.பி.

நாட்டில் எரிவாயு, எரிபொருள், பொருட்களுக்கான வரிசைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை குறித்து நான் பிரதமரிடம் கேள்வி எழுப்பினேன். நேற்று (நேற்றுமுன்தினம்) பிரதமர் சபையில் இருந்ததுடன், நிதி அமைச்சரும் பதவி விலகினார். ஆனால், இன்று (நேற்று) பிரதமர் சபையில் இல்லை. அவ்வாறாயின் அவர் பதவி விலகியுள்ளாரா? என்பதை சபாநாயகர் சபையில் அறிவிக்க வேண்டும். இல்லையேல் பிரதமரிடம் கேள்வி எழுப்புவதற்கு ஏன் சந்தர்ப்பம் வழங்குவதில்லை.

## பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுதான் என்ன?



கபீர் ஹசிம் எம்.பி.

அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது, அது நீக்கப்பட்டது குறித்து விளக்கமளிக்கப்பட்டது. ஆனால், அதனை விட நாட்டில் மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் உள்ளன. பொருளாதார நெருக்கடியால் இன்று குழந்தைகளுக்கு பால்மா இல்லை, எரிவாயு இல்லை, எரிபொருள் இல்லை. எனினும், இந்த நெருக்கடிகளை தீர்ப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஒரு வருடங்களுக்கு முன்னரே எதிர்க்கட்சி வலியுறுத்தியது. அரசாங்கம் கவனத்திற்கொள்ளவில்லை.

நாட்டில் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த, உரிய நேரத்தில் எரிபொருள் கொண்டுவர மற்றும் கடன் மீள் செலுத்தலை மீள்சுழச்சி செய்வதாக அரசாங்கம் அறிவித்தது. இதன் பிரதிபலன் என்ன? நெருக்கடிகளுக்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்கள் என்ன என்பதை விளக்கமளிக்க வேண்டும்.

## ஒரே பார்வையில்...



யோ. தர்மராஜ்

## போராட்டத்தில் இராணுவத்தினர் நுழைந்ததை ஏற்க முடியாது



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா

இனந்தெரியாதோர் மோட்டார் சைக்கிளில் போராட்டத்துக்கு வந்த சம்பவம் எங்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது குறித்த காணொளியை பார்த்தபோது, மோட்டார்சைக்கிளின் பக்கவாட்டில் இராணுவ இலக்கம் அச்சிடப்பட்டுள்ளது. எனினும், மக்கள் போராட்டத்திற்குள் ஆயுதம் ஏந்திய இராணுவ சிப்பாய்கள் நுழைவதை அனுமதிக்க முடியாது. வந்தார்களா அல்லது அனுப்பப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியாது. அது குறித்து அரசாங்கம் விசாரணை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோன்று, பொலிஸாருக்கு அதிகாரம் இருந்தாலும் சீருடைய அணிந்த ஒருவரை மக்கள் முன்னிலையில் தாக்குவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இராணுவத்தால் பொலிஸார் தாக்கப்பட்டாலும் நான் தாக்கியவருக்கு எதிராகவே நடவடிக்கை எடுப்பேன். ஆனால், மக்கள் போராட்ட இடத்துக்கு ஆயுதங்களை ஏந்திக்கொண்டு 4 மோட்டார்சைக்கிள்களில் வந்ததை நான் அனுமதிக்கமாட்டேன். எனவே, சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## ஆயுதத்துடன் வருவோர் எம்.பிக்கள் - மக்களையும் சுட்டுக்கொல்லலாம்



மனுச நாணயக்கார எம்.பி.

இனந்தெரியாத மோட்டார்சைக்கிள்களை யுத்த காலத்திலோ அல்லது கொரோனா காலத்திலேயே பயன்படுத்தவில்லை என ஆளுந்தரப்பு பிரதான கொறடா தெரிவித்தார். ஆனால், இவ்வாறான இனந்தெரியாத மோட்டார்சைக்கிளில் வந்தவர்களே அன்று லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தனர். அதேபோன்று, மிரிஹான சம்பவத்திலும் இவ்வாறு இனந்தெரியாத குழுவினர் வந்தனர். எனவே, இது பாதுகாப்பு தொடர்பான பாரிய பிரச்சினை.

உறுப்பினர்கள் வெளியில் வரும்போது, இவ்வாறு இனந்தெரியாத மோட்டார்சைக்கிளில் வந்து அவர்களை சுட்டுக்கொலை செய்யலாம். பொதுமக்களை கொலை செய்யலாம். முகத்தைக் கூட பார்க்கவிடவில்லை.

இராணுவத் தளபதியினால் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்து இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு கூறியுள்ளார். இராணுவத் தளபதியால் எவ்வாறு விசாரணைக்கு உத்தரவிட முடியும். எனவே, தற்போதைய நிலைமை தொடர்ந்தால் இனந்தெரியாதவர்களால் அரச பயங்கரவாதம் உருவாகக்கூடும். 88 மற்றும் 89ஆம் ஆண்டுகளைபோன்று ஆயுதமேந்தி சாதாரண மக்களை கொலை செய்தது போன்ற நிலைமை ஏற்படலாம். இல்லையேல், இது குறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இனந்தெரியாத நபர்களை நடமாட இடமளிக்க வேண்டாம்.

## ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுக!

'கோ ஹோம் கோட்டா' என்பதை 225 பேரும் செல்லுங்கள் என மாற்றினால் இலகுவானது. இன்று மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டம், ஜனாதிபதி பதவி விலகும்வரை ஓயாது.

நாடாளுமன்றம் கூடியவுடன் தீர்வு கிடைக்கும். ஜனாதிபதியை நீக்குவார்கள் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அதைபற்றி பேசுவதற்குக்கூட இடமில்லை என்றால்



இரா. சாணக்கியன் எம்.பி.

நாடாளுமன்றமும் தேவையில்லை என நினைக்கின்றனர்.

கிராம மக்கள் பேராடி களைத்துவிட்டனர். இல்லையேல் அவர்கள் கொழும்புக்கு வருவார்கள். எனவே, இது மேல்மாகாண மக்களின் போராட்டம். இங்குள்ள மக்கள் போராட்டத்தை கைவிட வேண்டாம். ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும். விலகும் வரை போராடுங்கள்.

அங்கும் இங்கும் போராட வேண்டாம். ராஜபக்ஷக்களின் வீட்டுக்கு முன்னால் சென்று அமருங்கள். ஜனாதிபதி மாளிகையை சுற்றி முற்றுகையிடுங்கள். இன்று 100 பேர் என்றால் நாளை இலட்சமாக மாறும். எனவே, போராட்டத்தை கைவிட வேண்டாம்.

## ஜே.வி.பியினர் மீண்டும் கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சி



அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறிய அநுரகுமார திஸாநாயக்கவின் வாகனத்தில் ஹெல்மட் அணிந்த ஒருவர் ஏறுகின்றார். அது யார்? எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எங்களையும் நாங்கள் அவர்களையும் கொலை செய்ய முயற்சித்ததில்லை. ஜனநாயக வியூகத்திற்குள் ஜேவிபி வந்ததை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றோம். ஜனநாயகம் இருந்தால் யாருக்கும் அரசியல் செய்ய முடியும்.

எதிர்க்கட்சியும் நாங்களும் அளவுக்கு அதிகமாகவே போராட்டங்கள் செய்துள்ளோம். ஜேவிபியினர் 88 – 89ஆம் ஆண்டுகளில் 293 துப்பாக்கி ரவைகளால் என்னுடைய வீட்டின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்த என்னை கொலை செய்ய வந்தனர். அன்றும் நாங்கள் உங்களை முடக்கவில்லை. எனவே, வன்முறைகளுக்குச் செல்ல வேண்டாம். அடுத்த ஜனாதிபதி ஜேவிபி தலைவர் எனக் கூறினால் எதற்கு வன்முறைகளுக்குச் செல்கின்றீர்கள்.

இன்று எந்தவொரு முதலீட்டாளர்களும் வருவதில்லை. பத்திரிகைகளில் கூட பொருளாதாரம் தொடர்பாக எவ்வித செய்தியும் இல்லை. அரசுக்கு பெரும்பான்மை இழக்கப்பட்டது மாத்திரமே இருக்கின்றன.

எதிர்க்கட்சியினரும் நாங்களும் வாத விவாதங்கள் செய்துள்ளோம், முரண்பட்டுக்கொண்டோம். நாங்களும் இரு பக்கமும் இருந்துள்ளோம். ஆனால், தற்போது நாடு வீழ்ச்சியடைய இடமளிக்க வேண்டாம் என கைக்கூப்பி கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் கோட்டா கோ ஹோம் எனக்கூறுகின்றீர்கள். அது தொடர்பாக எங்களுக்கு எவ்வித பிரச்சினையுமில்லை. ஆனால், ஜேவிபியின் மரண அரசியலை கண்டியுங்கள். அவர்கள் கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

88, 89ஆம் ஆண்டுகளில் உங்களுடைய தலைவர் எடுத்த தவறான முடிவால் இலட்சக்கணக்கான மக்களை கொலை செய்தீர்கள். அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கிளர்ச்சியாளர்களை இணைத்து கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சிக்கின்றீர்கள். ஆனால், அவசரகால மற்றும் ஊரடங்கு சட்டத்தைக் கொண்டுவந்து பாரிய கிளர்ச்சி ஏற்படவிருந்ததை தவிர்த்தார். தற்போது அவசரகால சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

எங்களை தாக்க முற்பட்டால் அதனை நாங்கள் எதிர்கொள்வோம். ஜனநாயக ரீதியில் மக்கள் ஒன்றிணையுங்கள். எம்.பிக்களுக்கு பாதுகாப்புகளை உறுதிபடுத்துங்கள்.

இளைஞர்களை மூளைச்சலவை செய்தே அவர்களை கொலை செய்தனர். இனியும் அதற்கு இடமளிக்க வேண்டாம். எங்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால் ஜனநாயக ரீதியில் அதற்கு முகங்கொடுக்க எங்களுக்கு முடியும். 50 - 75 பேர் பாதைக்கு இறங்கி 2 கோடி மக்களை அழிக்க முற்படுவோருக்கு எதிராக போராடுவோம்.

## சட்டத்துக்கமைய மக்கள் போராட்டத்துக்கு இடமளிக்க வேண்டும்



மரிக்கார் எம்.பி.

ஏப்ரல் தாக்குதலை காட்டிக்கொடுத்து இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதே இந்த ஏமாற்றங்கள் ஏற்பட்டன. மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டு கடந்த இரு வருடமாக இந்த அரசாங்கம் மக்களை ஏமாற்றியது.

இன்று பாதையில் இருப்பவர்கள் எங்களுடைய கட்சியினரல்ல. மாறாக, 69 இலட்சத்துக்கு வாக்களித்த மக்களே இன்று வீதியில் இறங்கி கோட்டா கோ ஹோம் எனக் கூறுகின்றனர். எனினும், இந்த போராட்டம் பாரிய கிளர்ச்சியாக மாற இடமளிக்க முடியாது. சட்டத்துக்கமைய மக்களின் போராட்டங்களுக்கு அனுமதிக்க வேண்டும்.

225 பேரையும் மீறி வெளியிலிருந்து ஜனாதிபதி ஒருவரை கொண்டுவந்தபோதிலும் ஒரு வருடத்தில் வெளியேறுமாறு கோருகின்றனர். தற்போது எமக்கு இடைக்கால அரசாங்கம் தேவையில்லை. மாறாக, மக்களின் போராட்டத்திற்குள் இருக்கும் கோரிக்கை என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். 225 பேரும் அதை புரிந்துகொண்டால் இடைக்கால அல்லது தேசிய அரசாங்கம் தேவையில்லை.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய, ராஜபக்ஷக்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதையும் சூறையாடிய பணத்தை மீண்டும் தாருங்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

## அவசரகால சட்டம் தேவையற்ற விதத்தில் அமுல்படுத்தப்படவில்லை



அமைச்சர் தினேஸ் குணவர்தன

நாட்டில் அவசரகால சட்டம் தேவையற்ற விதத்தில் அமுல்படுத்தப்படவில்லை. எதிர்க்கட்சியினால் ஜனாதிபதியின் அலுவலகம் முற்றுகையிட்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சொத்துகள் எரிக்கப்பட்டன. இதனால், பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்தோடு, சிலர் கைதுசெய்யப்பட்டதோடு, நாட்டில் அவசரகால நிலைமை ஏற்பட்டது.

பின்னர், நாடுபூராகவும் போராட்டங்கள் மற்றும் சில அசம்பாவிதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இதனால், பொதுமக்களையும் சொத்துகளை பாதுகாப்பதற்கும் ஜனாதிபதியினால் ஊரடங்கு சட்டமும் பின்னர் அவசரகால சட்டமும் அமுல்படுத்தப்பட்டன. அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஜனாதிபதியின் முடிவை அரசாங்கம் ஆதரித்தது. எனினும், நேற்று (நேற்றுமுன்தினம் 05) ஜனாதிபதி தலைமையில் கூடிய பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கமைய அவசரகால சட்டம் நீக்கப்பட்டது.



ஹட்டன் நகரில் எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் நேற்று (06) காத்திருந்தனர்.

# மன்னார் பொது வைத்தியசாலையின் பணியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணியாளர்கள் நேற்று முன்தினம் (05) மதியம் ஒரு மணிநேரம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் (05) மதியம் 12 மணிமுதல் 1 மணிவரை குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

13 சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தை உடனடியாக இரத்துசெய்யக் கோரியும், மக்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்படுவதை நிறுத்தக் கோரியும், கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலைசெய்யக் கோரியும், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை கண்டித்தும், மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யக் கோரியும், சுகாதார சேவைக்கு அத்தியாவசிய தேவைகளை உடனடியாக வழங்கக் கோரியும், மக்களின் உயிரை பாதுகாக்கக்கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணியாளர்கள் ஜனாதிபதிக்கு எதிராக பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## உள்ளூராட்சி மன்றங்களில் பெண் சமத்துவம் தொடர்பில் பதுளையில் விசேட செயலமர்வு

பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டமும் முன்னெடுப்பு







(பதுளை செய்தியாளர்)

பதுளை மாவட்ட பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபைகள், நகர சபைகள் ஆகியவற்றின் தமிழ், சிங்களம், முஸ்லிம் பெண் உறுப்பினர்களின் மேம்பாடுகளை முன்னிலைப்படுத்தி, பதுளை மகளிர் அபிவிருத்தி அமைப்பினர், எஸ்.எப்.சி.ஜீ மற்றும் வில் கிலப் அமைப்புகளுடன் இணைந்து பதுளை ஹெரிடேஜ் கிராண்ட் விடுதியில் செயலமர்வொன்றினை நேற்று(06) மேற்கொண்டிருந்தனர். அதையடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த மேற்படி உறுப்பினர்கள் மக்களவைகளில் பெண் உறுப்பினர்களை 25 வீதத்திலிருந்து 16 வீதமாக குறைக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்து பதுளை மாநகரில் ஆர்ப்பாட்டமொன்றினையும் மேற்கொண்டிருந்தனர்.





ட்ரைட்டன், யதன்சைட், யுனிபீல்ட், கிறிஸ்லஸ்பார்ம் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தன்னார்வ இளைஞர், யுவதிகளுடன் இணைந்து கொட்டகலையில் நேற்றுமுன்தினம் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## தெஹியோவிட்ட பிரதேச சபை தவிசாளர் கைது

பட்டாங்கல தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களால் அவிசாவளை நகரத்தில் நடத்தப்பட்ட அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த பிக்கு ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் தெஹியோவிட்ட பிரதேச சபை தவிசாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது இடம்பெற்ற முறுகலின்போது பிக்குவொருவர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் அவர் எஹெலியகொடை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பில் அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் தெஹியோவிட்ட பிரதேச சபை தவிசாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## பேராசிரியர் சந்திரசேகரம் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்

அனுதாபச் செய்தியில் அரவிந்தகுமார் எம்.பி. தெரிவிப்பு

(பதுளை செய்தியாளர்)

பதுளை மண் பெற்றெடுத்த தவப்புதல்வனான மூத்த பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரத்தின் இழப்பு, பதுளை மட்டுமன்றி முழு மலையகத்திற்குமே பேரிழப்பாகுமென்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரத்தின் மறைவினையொட்டி, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் அனுதாபச் செய்தியொன்றினை விடுத்துள்ளார். அந்த அனுதாபச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து அவ் அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பேராசிரியர் கல்வித்துறை வரலாற்றில், தனக்கென்ற தனித்துவமானதொரு இடத்தை அவர் இறக்கும் வரை தக்கவைத்திருந்தார். கடந்த 1996ஆம் ஆண்டு, எமது நாட்டின் இனப்பிரச்சினை குறித்த ஆதாரங்களுடனான ஆய்வுக் கட்டுரையொன்றை நோர்வே நாட்டில் இடம்பெற்ற செயலமர்வின் போது பேராசிரியர் சந்திரசேகரம் சமர்ப்பித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார். அவ்வகையில், ஆய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றில் அவர் தடம் பதித்துள்ளார். மத்திய வங்கியில் சில காலம் மொழிபெயர்ப்பாளராகவும் பேராசிரியர் கடமையாற்றியிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத் தலைவராகவும் தேசியக் கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினராகவும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் இருந்து வந்த பேராசிரியர், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை கொண்டவராகவும் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுமுள்ளார். மேலும், மலையகத்தில் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் முதன் முதலில் முன்மொழிந்தவரும் பேராசிரியரேயாவார்.

பதுளை ஊவாக் கல்லூரி, தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், ஆரம்பக் காலத்திலேயே சமூக மேம்பாடு கருதி ஆழமாக சிந்தித்துச் செயல்பட்டவர். சமூகத்தின் விடிவிற்காக செயற்பட்ட இமயம் தமது 77 ஆவது வயதில் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு பெரும் துயரடைந்தேன். அவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் அவர் விட்டுச் சென்ற பனிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே அவருக்கு செய்யும் அர்ப்பணமாகும்.

இவரது இழப்பு, ஈடுசெய்ய முடியாததோடு அவரது பிரிவால் துயரமடைந்திருக்கும் குடும்பத்தினரது துயரில் நானும் எனது குடும்பத்தினரும் எனது மலையக உறவுகளும் பங்கேற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியா பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவன் மரணம்

(வவுனியா நிருபர்)



வவுனியா பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்தியர் லவன் விபத்து காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (05) இரவு தனது 58ஆவது வயதில் காலமானார்.

வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் தொற்று நோயியலாளராகவும், மாவட்ட கொவிட் கட்டுப்பாட்டு செயலணி உறுப்பினருமாகவும் செயற்பட்டுவந்த வைத்தியர் லவன், கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் விபத்து ஒன்றின்போது தலையில் பலத்த காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் கொண்டுசெல்லப்பட்டு மீண்டும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

## கிளிநொச்சி பொதுச் சந்தையில் கண்ணிவெடி விழிப்புணர்வு



(கிளிநொச்சி நிருபர்)

கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாடு ஒன்று கிளிநொச்சி பொதுச்சந்தையில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான டாஸ் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி சர்வதேச கண்ணிவெடிகள் செயற்பாட்டுத் தினத்தை முன்னிட்டு (DASH) சமூக நல்லிணக்கத்திற்கான டெல்வோன் உதவி அமைப்பு (Delvon Assistance For Social Harmony) கிளிநொச்சி கரைச்சி பொதுச் சந்தையில் கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டை நேற்று (06) மேற்கொண்டது.

கண்ணிவெடிகள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும் என்ற எண்ணக்கருவில் இவ்வாறான நடவடிக்கைகள் பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் இச்செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்படும் எனவும் டாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையின் பழைய மாணவர்களால் நம்பிக்கை நிதியம் ஆரம்பித்துவைப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புப் புலமைப்பரிசில் செயற்றிட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கை நிதியம் நேற்று (06) வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பாடசாலையின் தாய்ச் சங்கத்துடன் இணைந்து அவுஸ்திரேலிய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கும் திறமை வாய்ந்த மாணவர்களை கல்வியில் ஊக்குவிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கை நிதியம் நேற்று (06) மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் காலை 7.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் நீண்டகாலமாக செயற்படும் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அவுஸ்திரேலிய கிளையின் ஏற்பாட்டில் அவர்களின் நிதி அனுசரணையில் வறுமையின் காரணமாக கல்வி நடவடிக்கைகளில் இடர்படும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு குறித்த நம்பிக்கை நிதியம் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர், அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்கக் கிளையில் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். குறித்த நம்பிக்கை நிதியத்தின் ஊடாக 6 மில்லியன் ரூபா நிதி உதவி பாடசாலை ஊடாக வறிய மாணவர்களுக்கென முதல்கட்டமாக முதலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அரசாங்கத்துக்கு எதிராக மாத்தளை மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அரச ஊழியர்கள் இணைந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு: மாத்தளை செய்தியாளர்)

## சுன்னாகம் பொது நூலக சிறுவர் வாசிப்பு வட்டத்தின் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு



(யாழ். நிருபர்)

உலக சிறுவர் புத்தக தினத்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலக சிறுவர் வாசிப்பு வட்டத்தின் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் நூலக கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இராஜரட்ணம் கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமரனும் (இயல்வாணன்), கௌரவ விருந்தினராக வலி தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் கருணாகரன் தர்சனும், வலி. தெற்கு பிரதேச சபை உப தவிசாளர், வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

சிறுவர் வாசகர் வட்டத்தின் உறுப்பினர்களுக்கான சீருடை, உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து சிறுவர் வாசகர் வட்டத்தின் உறுப்பினர்களின் உரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன.

நிகழ்வின் முக்கிய அம்சமாக சிறுவர் வாசகர் வட்ட உறுப்பினர்களின் ஆக்கங்களை தாங்கிய 'முகிழ்' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வாழ்த்துரையை எங்கட புத்தகங்கள் குலசிங்கம் வசீகரன் நிகழ்த்தியிருந்தார். தொடந்து கலை நிகழ்ச்சிகளும் விருந்தினர் உரைகளும் இடம்பெற்றிருந்தன. நிகழ்வின் இறுதி அம்சமாக பிறந்தநாள் காணும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமரனுக்கு தவிசாளர் மாலை அணிவிக்க, மாணவர்கள் வாழ்த்து தெரிவிக்க நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

சீட்டிலுக்கப்பட்ட திகதி 05.04.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4726
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,406,160.00
அச்சிடப்பட்ட திகதி 03.04.2022
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 4 7 4 6 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,880,230.00

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /04 /05
சீட்டிழுப்பு இலக்கம் : 758
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,868,640.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 09 25 44 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,390,281.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0038
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,348,320.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 04.04.2022
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 01 09 25 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,651,205.00

23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1075
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.04.04
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,691,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,367,726.00
G 05 36 37 65 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# கல்முனை மாநகர புதிய ஆணையாளர் கடமையேற்க அனுமதி மறுக்கப்பட்டதா?

## உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு என்கிறார் முதல்வர் றகீப்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளர் கடமையேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது - என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 14 (3)இன் பிரகாரம் கல்முனை மாநகர சபையின் பிரதம நிர்வாக அதிகாரி என்ற ரீதியில் மாநகர முதல்வராகிய எனக்கு, கடமையிலிருந்து வந்த மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சாரின் இடமாற்றம் தொடர்பாகவோ அல்லது புதிய ஆணையாளர் நியமனம் பற்றியோ மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்தோ அல்லது பிரதம செயலாளரிடமிருந்தோ அல்லது ஆளுநர் தரப்பிலிருந்தோ எவ்வித அறிவித்தலும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

அதேபோல், புதிய ஆணையாளராக நியமனம் பெற்றவரும் அது குறித்து எனக்கு அறிவிக்கவில்லை. அவ்வாறே கடமையில் இருந்த ஆணையாளர் தமக்கு இடமாற்றம் வந்திருப்பதாக தெரியப்படுத்தவுமில்லை.



இந்நிலையில், கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை நான் அலுவலகத்தில் இல்லாத வேளையில், சிவலிங்கம் ஆணையாளராக கடமையேற்க வந்திருக்கிறார். அவருடன் மாநகர சபை உறுப்பினர் இராஜன் மற்றும் பௌத்த தேரர் உள்ளிட்ட மத குருக்களும் மாநகர சபைக்கு வருகை தந்துள்ளனர். அப்போது ஆணையாளரின் அலுவலக அறையை திறக்குமாறு இராஜன், எமது மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தரை பலவந்தப்படுத்தி, அச்சுறுத்தியதுடன், நிர்வாக செயற்பாடுகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தார்.

அது மாத்திரமல்லாமல், மாநகர சபையின் பிரதான நுழைவாயில் கதவுகளுக்கு அவர் பலாத்காரமாக பூட்டுப்போட்டு, மூடிவைத்து, மாநகர சபையின் அலுவலக செயற்பாடுகளை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இதனால் நீண்டநேரம் மாநகர சபையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்ததுடன், அங்கு பரபரப்பான சூழ்நிலையும் பதற்றமும் ஏற்பட்டிருந்தது. பொலிஸாரின் வருகையையடுத்தே நுழைவாயில் கதவுகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான அடாவடி செயற்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாகவே புதிய ஆணையாளரின் கடமையேற்பு நிகழ்வு தடைப்பட்டிருக்கிறது.

இவ்விவகாரம் பொலிஸ் முறைப்பாடுகளை யடுத்து நீதிமன்றம் வரை சென்று, கடந்த திங்கள் (04), செவ்வாய் (05) ஆகிய இரு தினங்களும் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று, இரு தரப்பினரதும் சமர்ப்பணங்களை உள்வாங்கிய நீதவான், இவ்விடயம் தொடர்பில் இந்நீதிமன்றமானது எவ்வித கட்டளையையும் பிறப்பிக்கும் அதிகார வரம்புக்குட்பட்டதல்ல எனத் தெரிவித்து, வழக்கை முடிவுறுத்தியுள்ளார்.

உண்மையில், புதிய ஆணையாளர் தனது நியமனம் மற்றும் கடமையேற்பு குறித்து எனக்கு முறையாக அறிவித்து, கலந்துரையாடியிருப்பாராயின், இவ்வாறான சர்ச்சைகளை தவிர்த்திருக்க முடியும். இவ்விடயத்தில் வெளியாரை முன்னிறுத்தியதால், அது அரசியலாகவும் இனவாதமாகவும் மாற்றப்பட்டு, தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவித்திருக்கிறது.

விடயம் இவ்வாறிருக்க, இடமாற்றப்பட்ட ஆணையாளர் முஸ்லிம் என்பதாலும் புதிய ஆணையாளர் தமிழர் என்பதாலும் அவரை கடமையேற்க விடாமல் தடுக்கப்பட்டதாக மாநகர சபை உறுப்பினர் இராஜன் முகநூல்களில் இனவாத நச்சுக்கருத்துகளை தெரிவித்துள்ளார். புதிய ஆணையாளர் கடமையேற்பு விடயத்தில், தான் மூக்கை நுழைத்து, சண்டித்தன அரசியல் செய்ய முனைந்ததாலேயே ஆணையாளர் கடமையேற்பு சர்ச்சையாக மாறியது என்பதை மூடி மறைப்பதற்காகவே இராஜன் இவ்வாறான இனவாதக் கருத்துகளை பரப்பி வருகின்றார்.

கல்முனையில் எப்போதுமே இனவாதத்தை தூண்டிவிடுகின்ற இவரது செயற்பாடுகள் குறித்து தமிழ் சமூகம், குறிப்பாக, கல்முனை வாழ் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என அன்பாய் வேண்டிக்கொள்கின்றேன் - என்று முதல்வர் றகீப் தெரிவித்துள்ளார்.

## போடியார் புலம்பல்!



நாடு முழுவதும் 69 இலட்சம் மக்களின் ஆதரவு ஜனாதிபதி கோட்டாவுக்கு இருப்பதால் அவர் பதவி விலகத் தேவை இல்லையாம் எண்டு முந்தநாள் அமைச்சரான தம்பி ஜோண்சன் சொல்லுறாரு... அடே பொடியா நீ ஆரு வாத்தியாரிட்டடா கணக்கு பாடம் படித்த..? 2019இல் 69 இலட்சம் இப்ப 2022இல் 69 ஆயிரமும் தேறாதுடா... அந்த மக்கள்தான் "கோட்டா கோ கோம்" எண்டு கத்துர சத்தம் காதக்குடுத்து கேட்டுப்பாரு! ஆட்டம் காணும் நாடாளுமன்றத்தில அண்ணன் தம்பி செல்வாக்கும் காற்றில பறக்குது எலுவா!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வறுமையின் பிடியிலும் மனிதாபிமானமில்லாது வரி கோருகிறது கிழக்கு இறைவரித் திணைக்களம்

## ஆளுநர் தலையிட்டு தீர்வை பெற்றுத்தர மக்கள் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் இக்கட்டான சூழ்நிலைகளை கவனத்திற்கொள்ளாது இறைவரித் திணைக்கள கிழக்கு மாகாண காரியாலயத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் நடமாடும் சேவைகள் மூலமாக பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை தினம் சந்தித்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நாட்டில் நிரந்தர மின்சாரமின்மை, எரிபொருள் பிரச்சினைகள், அன்றாட வாழ்வியலில் பொதுமக்கள் சந்திக்கும் சிக்கல்கள் காரணமாக வாழ்வாதாரம் முற்றாக இழக்கப்பட்டுள்ளதாகவும் விலைவாசி உயர்வுகள், பொருட்கள் இல்லாத திண்டாட்டம் காரணமாக தொழிலில்லா நிலைகள் உள்ளதாகவும் இந்த காலகட்டத்தில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் வரி அறவிடுதல் எனும் போர்வையில் மனசாட்சிக்கு விரோதமான பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ந்துள்ள இந்த காலகட்டத்தில் இறைவரி அறவிடல்களை செய்து உள்ளூராட்சி மன்றங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் இறைவரித் திணைக்கள அதிகாரிகள், ஏழை எளிய மக்களின் பசியையும் வாழ்வாதார நிலைகளையும் கவனத்திற்கொள்ளாது செயற்படுகிறார்கள். மக்களின் நிலைகள் தொடர்பில் எவ்வித கரிசனையுமின்றி கல்முனை மாநகர சபையினரும் தங்களின் வருமானத்தை கவனத்திற்கொண்டு இவ்வேலைத்திட்டத்தை செய்ய பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

நாட்டின் நிலையறிந்தும், மக்களின் வாழ்வியல் கஷ்டங்களை அறிந்தும் இந்த வரி அறவிடும் வேலைத்திட்டத்தை நாடு சீராகும்வரை பிற்போட நடவடிக்கை எடுக்க கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், இறைவரி திணைக்கள ஆணையாளர் உட்பட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# கல்முனை மாநகர சபை உறுப்பினர் அஹமட்லெப்பை றபீக் பதவி நீக்கம்



(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பான உறுப்பினர் அஹமட்லெப்பை றபீக் அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை கல்முனை மாநகர சபைக்கான தெரிவத்தாட்சி அதிகாரி சுகன் ஸ்ரீநாத் அத்தநாயக வெளியிட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பான உறுப்பினர் அஹமட்லெப்பை றபீக் என்பவரது கட்சி உறுப்புரிமை இல்லா தொழிந்துள்ளதால் மாநகர சபையின் உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளார் என அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உறுப்பினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவி வகித்துக்கொண்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவு வழங்கி வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டு சுதந்திரக் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இது குறித்து அக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரவினால் தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தவொரு வட்டாரத்திலும் வெற்றிபெறாத போதிலும் விகிதாசார அடிப்படையில் மேலதிக பட்டியல் ஊடாக ஓர் ஆசனத்தை பெற்றிருந்தது.

இந்த ஆசனத்திற்கு மர்ஹூம் இசட்.ஏ.எச். ரஹ்மான் உறுப்பினராக நியமிக்கப்பட்டு, சில மாதங்கள் பதவி வகித்துவந்த நிலையில், அவர் பொலிஸ் சேவையில் மீண்டும் இணைவதற்காக உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அஹமட்லெப்பை றபீக் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நற்பிட்டிமுனை வட்டாரத்தில் போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் டெங்கு அதிகரிக்கும் ஆபத்து

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை வடக்கு பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் டெங்கை ஒழிக்கும் நோக்கில் டெங்கு கட்டுப்பாட்டுக்காக கல்முனை மாநகர சபை எதுவித ஒத்துழைப்பும் நல்காமல் இருப்பதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் சூழ்நிலை மற்றும் சுகாதார நிலை மோசமாக உள்ள இந்த காலகட்டத்தில் கல்முனை மாநகர சபை பல்வேறு முரண்பாட்டு நிலை காரணமாக மக்கள்நலத் திட்டங்களை செய்வதில் அக்கறை காட்டாமல் இருந்துவருவதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கல்முனை மாநகர சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு வினவியபோது, மாநகர சபை சுகாதார பிரிவினரால் செய்யப்படவேண்டிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை வளப்பற்றாக்குறை காரணமாக கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரினால் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டதாகவும் அதற்கான எரிபொருளை கல்முனை மாநகர சபை வழங்கி வருவதாகவும் தெரிவித்தனர். இருந்தபோதிலும் கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவினால் எரிபொருள் ஆணை ஏற்கனவே வழங்கப்பட்டும் கல்முனை முதல்வர் காரியாலயத்திலிருந்து எரிபொருள் ஆணை விநியோகிக்கப்படாமல் தடுத்து வைத்திருப்பதாக தெரிவித்தனர்.

இவ்வாறான பொறுப்புணர்ச்சியற்ற செயற்பாடுகளினால் ஏற்படும் நோய் நிலை அசௌகரியங்கள், டெங்கு மரணங்களுக்கு கல்முனை மாநகர சபை முதல்வர் பொறுபேற்பாரா என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

# மூன்று கிலோ கேரள கஞ்சாவுடன் வாழைச்சேனையில் இருவர் கைது



(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புனானை மியான்குளம் பகுதியில் வைத்து 3100 கிராம் கேரள கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் நேற்று (06) புதன்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே 3100 கிராம் கேரள கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் புனானை மியான்குளம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பு பகுதிக்கு வியாபாரத்திற்காக இரண்டு இளைஞர்கள் மோட்டார்சைக்கிளில் கொண்டு வந்த நிலையில், புனானை மியான்குளம் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டு, வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் தொடர்புடைய வியாபாரிகள் வேறு யாராவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்வதற்கு பொலிஸாருடன் இணைந்து வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு அதிகாரிகள் மற்றும் வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர் இணைந்து செயற்பட்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் 235 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிதாக நியமிப்பு

## பிரதிப் பிரதம செயலாளர் மன்சூர் தெரிவிப்பு

(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுகள், திணைக்களங்கள், தேசிய பாடசாலை மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு 235 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண அமைச்சுகள், மாகாண திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்காக 140 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், தேசிய பாடசாலைகளுக்கு 34 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், மாகாண பாடசாலைகளுக்கு 61 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப் பட்டவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 31 பேரும், அம்பாறை மாவட்டத்திற்கு 30 பேரும்



நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இன்று (07) 313 அபிவிருத்தி உத்தியோகத்தர் களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வும் இடம்பெறவுள்ளதாகவும், அதில் 75 பேர் திணைக்களங்களுக்கும், 238 பேர் பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



நிந்தவூர் சி.ஆர்.சி. முன்பள்ளி பாலர்நிலைய மாணவர்களின் வருடாந்த விடுகை விழா பாலர் நிலையப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸ் மௌலவி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி பாலர் நிலைய அதிகாரி மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக முன்பள்ளி பாலர் நிலைய அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி அதிகாரி விடுகை மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளின் சிலவற்றையும் படங்களில் காணலாம். (காரைதீவு நிருபர்)

# பெரியநீலாவணை அக்பர் பள்ளிவாசல் வளாகத்தில் இரத்ததான நிகழ்வு

(மருதமுனை, மருதமுனை மேலதிக நிருபர்கள்)

பெரியநீலாவணை அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகமும், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை நிர்வாகமும் இணைந்து ஏற்பாடுசெய்த இரத்ததான நிகழ்வு அண்மையில் அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது.




கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எவ்.றகுமானின் வழிகாட்டலில் சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.ஹாரீஸின் அனுசரணையில் நடைபெற்றது.

அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஐ.எம்.பாறூக் தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான கே.வித்தியா, தாதி உத்தியோகத்தர் யு.எம்.ஏ.ஜின்னாஹ், அஷ்ஷெய்க், எம்.ஐ.ஜிபான் ஆகியோருடன் ஏனைய தாதி உத்தியோகத்தர்களும் பள்ளிவாசல் நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

# மூத்த ஊடகவியலாளர் கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த அரங்கு அங்குரார்ப்பணம்






(கல்லடி நிருபர்)

கிழக்கின் சிரேஷ்ட ஊடகவியலாளரும், மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த கொண்டல், விடிவானம், தினக்கதிர் பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியருமான அமரர் வீ.சு.கதிர்காமத்தம்பியின் சேவைகளை நினைவுகூரும் முகமாக வீ.சு.கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த அரங்கு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் எல்.தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்களான சிவம் பாக்கியநாதன், சீ.ஜெயந்திரகுமார், வீ.பூபாலராஜா மற்றும் வீ.சு.கதிர்காமத்தம்பியின் குடும்பத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வீ.சு.கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த அரங்கின் பெயர்ப்பலகையினை அன்னாரின் பாரியார் திரைநீக்கம் செய்துவைத்தார். அத்தோடு அதிதிகளால் சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.சு.கதிர்காமத்தம்பியின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

# அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் அரசாங்கத்திற்கு எதிராக வெடித்தது போராட்டம்











(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில் தற்போதிருக்கும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது, மருதமுனை, கல்முனை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் செவ்வாய்க்கிழமை இரவு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நிறைய இளைஞர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு GO HOME GOTA, வீட்டுக்கும் கேடு, நாட்டுக்கும் கேடு. கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு, ஆட்சிசெய்து கிழித்தது போதும், குடும்ப ஆட்சி வேரோடு ஒழிக, பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, கோட்டாவுக்கு அறிவும் இல்லை, கோட்டா சேர் தயவுசெய்து போங்க சேர், வெந்தது நாடு. கோட்டாவ தூக்கி வெளியில் போடு, பொருளாதார நெருக்கடி இரவெல்லாம் கொசுக்கடி, பெசிலே வெளியேறு போன்ற கோஷங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பேரணியாக சென்றவர்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், அதனைக் கட்டுப்படுத்தும் வேலைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்ததுடன், பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டிருந்தமையயும் காணமுடிந்தது.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் கைத்தொழில்கள் பாதிப்பு

## கிண்ணியாவில் மக்கள் அங்கலாய்ப்பு





(கிண்ணியா நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக டீசலினை பெறுவதற்காக சனநெரிசலுடன் பல மணிநேரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி கிண்ணியாவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நேற்று முன்தினம் (05) இரவு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. வாகனங்கள் நீண்ட வரிசையில் வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், டீசலினை பெறுவதற்காக கேன்களும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைக் கிரமமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

நித்திரையின்றி பல மணிநேரம் காத்திருந்து, எரிபொருளினை பெரும் சிரமத்துக்கு மத்தியில் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ச்சியாக இவ்வாறான தட்டுப்பாடு காரணமாக அன்றாட கடல் தொழில் உள்ளிட்ட ஏனைய கைத்தொழில்களும் பாதிக்கப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான மோசமான நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் இதுவெனவும் மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதி மாகாண ஆளுநருடன் சந்திப்பு



(கிண்ணியா நிருபர்)

கிழக்கு கடற்படை கட்டளையின் புதிய தளபதி ரியர் அட்மிரல் கே.ஜே.குலரத்ன நேற்று முன்தினம் (05) மாலை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், கிழக்கு கடற்படை பாதுகாப்பு நடவடிக்கைகளில் இடம்பெறும் சட்டவிரோத சுற்றாடல் அழிவை நிறுத்துவதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என குலரத்ன தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்கவும் கலந்துகொண்டார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் றீஸ்மா 179 புள்ளிகள் பெற்று சித்தி



(மீராவோடை நிருபர்)

வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலய மாணவி எம்.ஆர்.எவ்.றீஸ்மா 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

குறித்த பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கும் கற்பித்த ஆசிரியை எம்.எம்.சனூபா மற்றும் ஒத்துழைப்புகளை வழங்கிய அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக அதிபர் எல்.ரீ.எம்.சாதிக்கீன் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# நிந்தவூர் கடற்கரைச் சூழல் பிரதேச சபை ஊழியர்களால் சுத்தம் செய்யப்பட்டது





(மாளிகைக்காடு நிருபர்)

நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கடற்கரைச் சூழல் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிரின் பணிப்புரையின் பேரில் பிரதேச சபையின் ஊழியர்கள் ஊடாக சுத்தம் செய்யப்பட்டது.

எமது நாட்டில் நிலவுகின்ற மின்வெட்டின் காரணமாக பொதுமக்கள் அதிகமாக கடற்கரை பிரதேசத்திற்கு இயற்கை காற்றை சுவாசிப்பதற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் வருவதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு மக்கள் கூட்டம் அதிகரிப்பதனால் கடற்கரை சூழல் வெகுவாக மாசடைந்து வருவதை கருத்திற்கொண்டே இத்துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பொழுதுபோக்கிற்காகவும் ஓய்வுநேரங்களை கழிப்பதற்காகவும் கடற்கரைக்கு வருகின்றவர்கள் தங்கள் கழிவுகளை முறையாக சுத்தப்படுத்தி சூழல் மாசுபடுத்தலை தடுப்பதற்கு உதவுமாறும் பிரதேச சபையூடான கழிவகற்றல் முகாமைத்துவத்திற்கு உதவுமாறும் பொதுமக்களை தவிசாளர் தாஹிர் கேட்டுக்கொண்டார்.

# மண்முனை வடக்கு பிரதேச செயலக ஸ்ரீ ராஜ கணபதி ஆலய சங்காபிஷேகம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக ஸ்ரீ ராஜ கணபதி ஆலயத்தில் மணவாளக் கோல சங்காபிஷேக பூசை நேற்று முன்தினம் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக செயலாளர் வாசுதேவன் தலைமையில் ஏற்பாடுசெய்யப்பட்ட சங்காபிஷேக பூசை, மண்முனை வடக்கு பிரதேச செயலக ஸ்ரீ ராஜ கணபதி ஆலய சிவாச்சாரி சிவநேசதுரை குருக்கள் மற்றும் அவரது குழுவினரால் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது.

ஆலய கும்பாபிஷேகம் இடம்பெற்று 5ஆவது ஆண்டு நிறைவையொட்டி 108 சங்குகளைக்கொண்டு இவ் விசேட சங்காபிஷேக நிகழ்வு இடம் பெற்றது.

இப்பூசை நிகழ்வுகளில் ஆலய நிர்வாகத்தினரின் பங்களிப்புடன் அன்னதானம் வழங்கப்பட்டதுடன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.












மாவடிப்பள்ளி அல்-மதினா பாலர் பாடசாலையின் பொன்விழாவும் இவ்வாண்டுக்கான மாணவர்கள் விடுகை நிகழ்வும் மாவடிப்பள்ளி அஷ்ரப் மகா வித்தியாலய கேட்போர் கூட்டத்தில் பாலர் பாடசாலை பணிப்பாளர் எம்.எச்.எம்.அஸ்வர் தலைமையில் நேற்று முன்தினம் (05) நடைபெற்றது. இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் பொறியியலாளர் கயந்த தர்சன, கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்பப் பேரவையின் பணிப்பாளரும், அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என்.ஹுதா உமர், முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜெஸ்மிர், கலாசார உத்தியோகத்தர் ஜே.கே.ரஷீத், ஓய்வுபெற்ற ஆசிரியர் எம்.எம்.மனாப் உட்பட பாலர் பாடசாலை அதிபர், ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (படங்கள் - நூருல் ஹுதா உமர்)





# “ராஜபக்ஷமார் அமெரிக்காவுக்கே செல்ல வேண்டும்” புத்தளத்தில் நூற்றுக்கணக்கானோர் போராட்டம்

(ரஸீன் ரஸ்மின்)

நாட்டின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளதை அடுத்து, ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரி புத்தளத்தில் கடந்த 04ஆம் திகதி மாலை முதல் இரவு வரை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் - கொழும்பு காலி முகத்திடலுக்கு முன்பாக இளைஞர்கள், யுவதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என 500 இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு புத்தளம் நகரில் ஒன்றுகூடியமையால் பெரும் பதற்ற நிலையும் ஏற்பட்டது.

இதனால், நகரில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. புத்தளம் நகர் ஊடாக குருநாகல் மற்றும் அநுராதபுரம், வவுனியா பயணிக்கும் வாகனங்கள் மாற்று வழி ஊடாக அனுப்பி வைக்கப்பட்டன. புத்தளம் நகர் முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், போக்குவரத்து பொலிஸாரும் வீதிப் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

“கோட்டா ஒரு பைத்தியகாரன்”, “ராஜபக்ஷக்கள் டொலர் திருடர்கள்”, “ வேலை தெரியாவிட்டால், தெரிந்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு வீடு செல்லுங்கள்”, “ராஜபக்ஷ எனும் பெயரில் இலங்கையில் அரசியல் செய்ய இனி யாருக்கும் இடமில்லை. இனி யாரும் வரவும் வேண்டாம்”, “குடும்பத்தோடு அமெரிக்காவுக்கே போயிடு கோட்டா” என இதுபோன்ற பல கோஷங்களை எழுப்பி சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக் காரர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

அத்துடன், மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியமைக்கு வருத்தத்தை தெரிவிப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

அத்தோடு ராஜபக்ஷக்களை இலங்கையிலிருந்து விரட்டியடிக்கும் வரை ஓயப் போவதில்லை எனவும் இதற்கு அனைவரும் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாகும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

புத்தளம் - கொழும்பு முகத்திடலுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் பின்னர் புத்தளம் நகர் சுற்றுவட்டம், தபால் சுற்றுவட்டம் ஊடாக புத்தளம் பஸ் நிலையம் வரை பேரணியாக சென்று மீண்டும் புத்தளம் - கொழும்பு முகத்திடலை வந்தடைந்தது.

சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின்னர் புத்தளம் நகரில் பட்டாசு கொளுத்தி போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## ஹம்பாந்தோட்டை மாமடல பகுதி துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழப்பு

### வாகன விபத்தில் சிக்கியதாகக் கூறி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் வாகன விபத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் இருவர் துப்பாக்கிச் சூட்டிலேயே பலியாகியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இக்கொலை சம்பவம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகன விபத்தில் இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் உண்மைகளை மூடி மறைக்க முற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஹம்பாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் மாடுகள் இரண்டை கொண்டு செல்ல வந்த இருவருக்கும் மாட்டு உரிமையாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஹம்பாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி அங்குனகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது கூறியது போன்று மாமடல - ரத்னவீர பாலத்திற்கு அருகில் விபத்து ஏதும் இடம்பெறவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் அம்பலாந்தோட்டை மற்றும் சூரியவெவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பல விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

## எரிபொருளை தொடர்ச்சியாக விநியோகிக்க நடவடிக்கை

எரிபொருள் விநியோக நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறுவதாக தனியார் எரிபொருள் பவுசர் உரிமையாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

இலங்கை தனியார் பவுசர் வாகன உரிமையாளர்கள் சங்கத்திற்கும் கொலன்னாவை மசகு எண்ணெய் முனைய நிறுவனத்தின் தலைவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல கோரிக்கைகளுக்குமான தீர்வுகள் கிடைக்காவிட்டாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன்கருதி எரிபொருள் விநியோக நடவடிக்கை இடம்பெறுவதாக தனியார் பவுசர் வாகன உரிமையாளர் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பின்மூலம் பிலிப்பைன்ஸின் நெற்பயிர் முகாமைத்துவம்

### இருநாட்டு நிபுணர்களும் இணையவழியில் சந்திப்பு



விவசாயத் திணைக்களம் - பிலிப்பைன்ஸ் அரிசி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மணிலாவில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், வெளியுறவுத் திணைக்களம் - பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சபை, இலங்கை விவசாயத் திணைக்களத்தின் முப்பத்திரண்டு விவசாய விரிவுரையாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு ஒருங்கிணைந்த நெற்பயிர் முகாமைத்துவம் குறித்த பயிற்சியாளர்களுக்கு மெய்நிகர் பயிற்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த நெற்பயிர் முகாமைத்துவ அமைப்பிலான பயிற்சியாளர்களின் பயிற்சி என்பது, பிலிப்பைன்ஸால் பயிர் முகாமைத்துவம், அரிசி உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை விவசாயிகள் மற்றும் நீட்டிப்பு இடைத்தரகர்களுக்குப் பரப்புவதற்கான தளமாகப் பயன்படுத்தப்படும் ஒரு ஒருங்கிணைந்த நெற்பயிர் முகாமைத்துவ அமைப்பாகும்.

உயர்தர இன்பிரெட் அரிசி மற்றும் விதைகள் உற்பத்தி, நெற்பயிர் முகாமைத்துவ நடைமுறைகள், பண்ணை இயந்திரமயமாக்கல் மற்றும் அவர்கள் தமது பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு இவற்றை எவ்வாறு கற்பிக்கலாம் ஆகியவற்றில் பங்குதாரர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மூன்று தொகுதிகளை உள்ளடக்கிய குழு மற்றும் அனுபவப் பயிற்சியின் மூலம் இலங்கைக்கான வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும்.

வெளிவிவகாரத் திணைக்களம் – பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்புக் குழுவின் பணிப்பாளர் நாயகம் வில்லிபெத் டீபெரா தனது ஆரம்பக் கருத்துரையில், இலங்கைக்கான தமது தேவைகளை மதிப்பிடும் விஜயத்தின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், அவர்களது நிறுவனத்தின் இலங்கைக்கான தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் மூன்றாவது கட்டமாக 2019இல் இந்தச் செயற்பாடு இருப்பதாகக் கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சித்திட்டம் முழுவதிலும் தமது மதிப்புமிக்க ஒத்துழைப்பிற்கும் ஆதரவிற்கும் தூதரகம் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸில் இருந்து பங்குபற்றிய அரசாங்க நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவர் ஷோபினி குணசேகர தனது செய்தியில், பொருளாதார மற்றும் தேசிய வளர்ச்சியில் விவசாயத்துறையின் முக்கிய பங்கு பற்றி விரிவாகக் குறிப்பிட்டார். விவசாயத்தை நவீனமயமாக்குதல், நில உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் அரிசி தன்னிறைவு மற்றும் நிலைத்தன்மையை நோக்கிய அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியை ஊக்குவித்தல், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான பார்வையின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

வெளியுறவுத் திணைக்களம் - பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சபை மற்றும் பிலிப்பைன்ஸ் அரிசி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இரு நாடுகளைச் சேர்ந்த இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு பரஸ்பர முன்னுரிமை அளிக்கும் துறைகளில் ஒத்துழைப்பை வளர்க்கும் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் மூன்று முயற்சிகளிலும் பங்கேற்ற தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுக்கும் அவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களத்தின் செயலாளர் வில்லியம் டார்-பிலிப்பைன்ஸ் மற்றும் வங்காளதேசத்துக்கான பிலிப்பைன்ஸ் தூதுவர் அலன் டெனிகா ஆகியோரும் இந்த நடவடிக்கைக்கு தமது ஆதரவுச் செய்திகளை வழங்கினர். பில்ரைஸ் மேம்பாட்டுக்கான துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கரேன் எலோயிசா பரோகா, ஒரு மேலோட்டத்தை வழங்கியதுடன், பங்கேற்பாளர்கள் மற்றும் பயிற்சி முகாமைத்துவக் குழுவை அறிமுகப்படுத்தினார்.

தொழில்நுட்ப உதவித் திட்டம் என்பது வெளிவிவகாரத் திணைக்களத்தின் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு முன்முயற்சியாவதுடன், பிலிப்பைன்ஸின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சபை, பிலிப்பைன்ஸ் நிபுணத்துவம் பெற்ற பகுதிகளில் ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 60ஆவது ஆண்டு நிறைவைக் கருத்தில் கொண்டு இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் பரஸ்பர இலக்குடன் மேற்கூறியவை உள்ளிட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இலங்கை பணியாளர்களை இரட்டிப்பாக இணைக்க கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சர் உறுதி

### ஜீ.எல்.பீரிஸுடனான சந்திப்பின்போது தகவல்



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கொரியக் குடியரசின் அரச கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சர் கூ யுன் சியோல், அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை சந்தித்தார்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து நடைபெற்ற மதிய போசன விருந்தின்போது, இருதரப்பு உறவுகளின் முழுமையான வரம்பு மற்றும் கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய மற்றும் நட்பு ரீதியான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆராயப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கீழ் கடன் உதவிகள் மற்றும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகாமையின் ஊடாக உதவிகளை வழங்குவதன் ஊடாக இதுவரை வழங்கப்பட்டுள்ள மகத்தான ஆதரவிற்காக கொரிய அரசாங்கத்திற்கு இலங்கையின் ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், மருந்து உற்பத்தி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கழிவுகளை அகற்றுதல், எரிசக்தி, தொழில்நுட்பம், தொழில் பயிற்சி மற்றும் கல்வி உள்ளிட்ட பல துறைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

வெளிநாட்டு வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்தும் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்ததுடன், பரஸ்பரம் நன்மை பயக்கும் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு இரு தரப்பும் இணைந்து செயற்பட ஒப்புக்கொண்டன. கொரியாவில் வேலைவாய்ப்பு அனுமதி முறையின் கீழ் சுமார் 22 ஆயிரம் புலம்பெயர் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். இலங்கையர்களுக்கு இனிமையான தொழில் சூழலை வழங்கி, அவர்களது நலனில் அக்கறை செலுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தின் பாராட்டுகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

தென் கொரியாவில் இலங்கையர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு கொரிய அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் கூ யுன் சியோல் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி ஒதுக்கீடுகளுக்காக கொரியாவின் முன்னுரிமை நாடுகளில் ஒன்றாக இலங்கை பட்டியலிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். கொரியக் குடியரசின் அரச கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சருடன், அரசியல் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர், அபிவிருத்தி மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்திற்கான பணிப்பாளர் நாயகம், பொதுத் தொடர்புகளுக்கான பிரதமரின் செயலாளர், இலங்கைக்கான கொரியத் தூதுவர், கொரியக் குடியரசின் பிரதமர் அலுவலகம் மற்றும் கொழும்பில் உள்ள கொரியத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த கொரியக் குடியரசின் அரசக் கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, முன்னள் நீதியமைச்சர் அலி சப்ரி, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண மற்றும் இலங்கையில் உள்ள கொரிய வர்த்தகர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

## இலங்கையர்களுக்கு சென்னையில் பிறப்பு, குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கிவைப்பு




சென்னையில் உள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயம் 127 பிறப்புச் சான்றிதழ்கள், 315 குடியுரிமைச் சான்றிதழ்கள் மற்றும் 34 ஆர்.ஆர்.பி. கடவுச்சீட்டுகளை முறையே சான்சரி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று விசேட கொன்சியூலர் முகாம்களில் வழங்கியுள்ளது.

நாமக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டி, கோவை மாவட்டம் பூலுவப்பட்டி, ஈரோடு மாவட்டம் பவானிசாகர், அறச்சலூர், சேலம் மாவட்டம் பவளத்தானூர், மதுரை மாவட்டம் ஆனையூர், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, புழல் ஆகிய இடங்களில் கடந்த மார்ச் 11ஆம் திகதி நடத்தப்பட்ட விசேட முகாமில் 101 இலங்கையர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், ஈரோடு மாவட்டம் அரச்சலூர், திருவண்ணாமலை மாவட்டம் தவசி, மதுரை மாவட்டம் ஊச்சப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் அதியனூத்து, புதுப் பட்டி ஆகிய இடங்களில் வசிக்கும் இலங்கையர் களுக்கு மார்ச் 22ஆம் திகதி 158 குடியுரிமைச் சான்றிதழ்களும், 17 பிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மார்ச் 29ஆம் திகதி நடத்தப்பட்ட விசேட முகாமில், புதுக்கோட்டை மாவட்டம் அலியா னிலை, கோட்டப்பட்டு, திருச்சி மாவட்டம் வாழவந்தான்கோட்டை ஆகிய பகுதிகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு 157 குடியுரிமைச் சான்றிதழ்களும், 09 பிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும், இந்தத் தூதரகமும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரும் இணைந்து நடத்தும் தன்னார்வமாக தாயகம் திரும்பும் செயன்முறையில் பங்கேற்க விரும்பும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்காக 34 ஆர்.ஆர்.பி. (அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டம்) கடவுச்சீட்டுகளும் இதே முகாமில் வழங்கப்பட்டன.

# ரஷ்யாவும் ஐ.எஸ். தீவிரவாதிகளும் ஒன்றுதான்; நடவடிக்கை எடுக்காவிட்டால் சபையை மூடுங்கள்



## ஐ.நாவில் ஸெலென்ஸ்கி உரை



போர்க்குற்றம் புரிந்த ரஷ்ய இராணுவத்தை சர்வதேச நீதி அமைப்பு முன்பு நிறுத்தமுடியாவிட்டால் ஐக்கிய நாடுகள் சபையை இழுத்து மூடிவிட்டு செல்வதே சிறந்தது - என்று உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனின் புச்சா நகரில் ரஷ்ய இராணுவத்தால் 410 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்ட நிகழ்வு உலகம் முழுவதுமாக பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஐ.நாவின் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் காணொளி காட்சி வாயிலாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி உரையாற்றினார்.



2ஆம் உலகப் போருக்குப் பிறகு உக்ரைனில் ரஷ்ய இராணுவம் கொடூர போர்க் குற்றத்தை புரிந்திருப்பதாக ஸெலென்ஸ்கி குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும், அப்பாவி மக்கள் ரஷ்யாவின் பீரங்கிகளால் நசுக்கப்பட்டனர். பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகினர். உக்ரைன் நகரங்களில் ரஷ்யப் படையினர் அப்பாவி மக்களை குறிவைத்து தாக்குகின்றனர். ரஷ்யாவைப் போர்க் குற்றவாளியாக அறிவித்து தண்டிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ள ஸெலென்ஸ்கி,

புச்சா நகரில் அப்பாவி மக்களின் நாக்குகளை அறுத்தல், கிணற்றில் தூக்கிப்போட்டு கொல்லுதல், கத்தியால் கழுத்தை அறுத்தல், பெண்களை பாலியல் கொடுமை செய்து கொல்லுதல் போன்ற கொடுமைகளை பட்டியலிட்டார்.

ரஷ்ய இராணுவத்திற்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளும் எந்த வித்தியாசமும் இல்லை என்று குற்றஞ்சாட்டிய ஸெலென்ஸ்கி, ரஷ்யாவை ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்காவிட்டால் ஐ.நா. சபையை இழுத்தி மூடிவிடலாம் என்று ஆவேசமாக தெரிவித்தார். புச்சா நகரில் சிதறிக் கிடந்த மனித சடலங்கள் தொடர்பாக ரஷ்ய இராணுவம் மீது தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று ஸெலென்ஸ்கி கேட்டுக் கொண்டுள்ளார்.

### புச்சா படுகொலைக்கு போப் பிரான்சிஸ் கண்டனம்

இதேவேளை, புச்சா நகரில் நூற்றுக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் ரஷ்ய வீரர்களால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதற்கு போப் பிரான்சிஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

புச்சா நகரிலிருந்து அவருக்கு அனுப்பப்பட்ட கறை படிந்த உக்ரைன் நாட்டு தேசிய கொடியை ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் அவர் உயர்த்திக் காட்டினார்.

உக்ரைன் போரிலிருந்து தப்பித்துவந்த சிறுவர்களை மேடைக்கு அழைத்து அவர் உரையாடினார்.


புச்சா படுகொலைக்கு போப் பிரான்சின் கண்டனம்



மேலும், ''போரில் அப்பாவி உயிர்களைக் கொல்வதால் எந்தத் தீர்வும் ஏற்படாது. புச்சாவில் நிகழ்த்தப்பட்ட படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம். இது குறித்த சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும்'' என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போரால் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டு நலனைக் காக்க எத்தகைய முடிவெடுக்க வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் ஜெய்ஷங்கர் தெரிவித்தார்.

### ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேற்றும் ஜேர்மனி

புச்சா நகர படுகொலைகளுக்குப் பதிலடியாக ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேற்ற ஜேர்மனி அரசு முடிவுசெய்துள்ளது.

தலைநகர் கீவ்வுக்கு அருகேயுள்ள புச்சா நகரிலிருந்து வெளியேறுவதற்கு முன், ரஷ்ய வீரர்கள் அந்நகரில் வசித்துவந்த சுமார் 410 அப்பவி மக்களை படுகொலை செய்து புதைகுழிகளில் வீசிவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது. பல இடங்களில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

அப்பாவி மக்கள் மீதான இந்தக் கொடூர தாக்குதலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துவரும் நிலையில், தங்கள் நாட்டிலிருந்து ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேற்ற ஜேர்மனி முடிவுசெய்துள்ளது.



பிரான்ஸும் ரஷ்யத் தூதரக அதிகாரிகள் 35 பேரை வெளியேற்றவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதனிடையே, புச்சா நகர் படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்துள்ள ரஷ்ய அதிகாரிகள், உக்ரைன் வீரர்கள் நடத்திய தாக்குதலில் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

### ஒருவர் கூட உயிரிழக்கவில்லை; மறுக்கும் ரஷ்யா

புச்சா நகரில் அப்பாவி மக்களை கொன்று குவித்ததாக உக்ரைன் குற்றஞ்சாட்டியிருக்கும் நிலையில், ரஷ்யா அதனை தி[illegible]மாக மறுத்துள்ளது.

''உக்ரைனில் அட்டூழியம் என்ற செய்தி கட்டுக்கதை மட்டுமே. ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலிருந்த எந்த இடத்திலும் கொடுமைகள், கொலைகள் நடக்கவில்லை. இது கோபத்தை ஏற்படுத்தும் செய்தி மட்டுமே. புச்சா ரஷ்யக் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில், ஓர் உள்ளூர் நபர் கூட எந்த வன்முறை நடவடிக்கையாலும் பாதிக்கப்படவில்லை'' என்று தெரிவித்துள்ளது.

புச்சா நகர பகுதியை கடந்த சனிக்கிழமையே தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டதாக உக்ரைன் தெரிவித்திருந்த நிலையில், அதன் பின்னர்தான் உடல்கள் சிதறிக் கிடந்த காட்சிகள் வெளியானதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதனிடையே தீவிர பதில் தாக்குதலில் ஈடுபட்டுவரும் உக்ரைன் இராணுவ வீரர்கள் ஏராளமானோரை ரஷ்யப் படைகள் சுற்றிவளைத்து சிறைப்பிடித்துள்ளனர். 100இற்கும் மேற்பட்ட சிறைபிடிக்கப்பட்ட உக்ரைன் வீரர்கள் கைகளை உயர்த்தியபடி அழைத்துச் செல்லும் காட்சிகளை ரஷ்யா வெளியிட்டுள்ளது.

### அமெரிக்காவில் குடியேற காத்துக்கிடக்கும் உக்ரைனியர்கள்

போர் காரணமாக உக்ரைனிலிருந்து வெளியேறி அமெரிக்காவில் குடியேறும் நோக்கத்துடன் வந்த ஏராளமான அகதிகள் அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவையும் மெக்சிக்கோவையும் இணைக்கும் டிஜுவானா நகரத்திற்கு குழந்தைகள், பெண்கள் உட்பட இதுவரை சுமார் 1,700 உக்ரைனியர்கள் வந்துள்ளதாகவும், அமெரிக்க குடியேற்று அனுமதிக்காக காத்திருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனிலிருந்து வெளியேறும் ஒரு இலட்சம் பேருக்கு அமெரிக்காவில் அடைக்கலம் கொடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இன்றுடன் 43 நாட்களாகியுள்ள நிலையில் உக்ரைனிலிருந்து இதுவரை 43 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதுடன், 65இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்



## கும்பாபிஷேகத்துடன் திறக்கப்பட்டது உலகின் மிகப்பெரிய முருகன் சிலை

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உலகின் மிகப்பெரிய முருகன் சிலை கும்பாபிஷேகத்திற்கு பின் திறக்கப்பட்டது.

புத்திரகவுண்டன்பாளையத்தில் உலகிலேயே மிக உயரமான 146 அடி உயர ஸ்ரீமுத்துமலை முருகன் சிலை 4 வருடங்களாக அமைக்கும் பணி நடைபெற்றுவந்த நிலையில், அதன் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

இதில், திருவாரூர் சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் ஆறுபடை முருகன் கோவில் குருக்கள் கலந்துகொண்ட நிலையில் மங்கள வாத்தியங்கள் முழங்க பல்வேறு ஊர்களிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீர் வைத்து பூஜை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின்போது ஹெலிகொப்டர் மூலம் பூக்கள் தூவப்பட்ட நிலையில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு முருகனை வழிப்பட்டுச் சென்றனர்.

## தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற போதைப்பொருள் பறிமுதல்



தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.10 கோடி மதிப்பிலான போதைப்பொருள் படகுடன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி அருகே முள்வேலி கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கை வழியாக வளைகுடா நாட்டிற்கு கடத்தப்படவிருந்த ரூ 10 கோடி மதிப்பிலான 12 கிலோ கஞ்சா ஒயில் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட பைபர் படகுடன் தேசிய வருவாய் புலனாய்வுத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர். இதேவேளை, தப்பி ஓடிய படகோட்டியை தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு நூதன முறையில் கடத்தப்படவிருந்த சுமார் 10 கோடி ரூபா மதிப்புள்ள 50 கிலோ போதை மருந்தை சென்னை விமான நிலைய சரக்ககத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

## கடும் பொருளாதார நெருக்கடி:

# கூண்டோடு பதவி விலகியது குவைத் அரசு



கடும் பொருளாதார நெருக்கடியையடுத்து குவைத் அரசு கூண்டோடு இராஜினாமா செய்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான குவைத்தில் கடந்த 2019ஆம் ஆண்டுமுதல் பிரதமராக இருந்துவந்தவர் ஷேக் சபா கலீத் அல் ஹமத் அல் சபா. கடந்த டிசம்பர் மாதம் 5ஆம் திகதி குவைத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றதையொட்டி பிரதமர் ஷேக் சபா தனது பதவியை இராஜினாமா செய்தார். தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்றதும் ஷேக் சபாவை மீண்டும் பிரதமராக அரசர் ஷேக் நவாப் அல் அஹ்மத் அல் ஜாபர் அல் சபா நியமித்தார்.

இந்நிலையில், அமைச்சரவை அமைப்பதில் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கவில்லை என்றும், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற குழுக்களின் உறுப்பினர்களை தெரிவு செய்வதில் அரசின் தலையீடு இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் குற்றஞ்சாட்டினர். இது தொடர்பாக பிரதமரிடம் கேள்வி எழுப்பக் கோரும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு 30இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் அதற்கு ஆதரவளித்தனர்.

இதனால், நாடாளுமன்றத்தில் குழப்பம் உருவானது. அதேநேரத்தில் கடும் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ளதால், அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது. கடன் பிரச்சினை காரணமாக அரசு சொத்துகள் விற்கப்பட்டன. இந்த விவகாரத்தில் பிரதமர் தலைமையிலான புதிய அமைச்சரவை கூண்டோடு இராஜினாமா கடிதத்தை அரசர் ஷேக் நவாப்பிடம் ஒப்படைத்தனர். இந்த வாரத்தில் அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வரவிருந்த நிலையில், அரசு இராஜினாமா செய்துள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் குவைத்தில் 3ஆவது முறையாக அரசு இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடியால் இந்நாட்டு அரசுகள் கவிழும் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், குவைத்திலும் இதேபோன்ற நிலையில் அரசு இராஜினாமா செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மனிதாபிமான உதவிகளுக்காக காத்திருக்கும் மரியுபோல் மக்கள்




உக்ரைனின் மரியுபோல் (Mariupol) நகரில் மனிதாபிமான உதவிகள் பெறுவதற்காக மக்கள் நீண்டதூரம் வரிசையில் நிற்கும் ட்ரோன் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இந்த நகரில் ரஷ்யாவின் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பு 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்துவந்துள்ளனர். ஆனால், தற்போது இந்த நகரம் முற்றிலுமாக அழிந்துபோன நிலையிலுள்ளது.

அங்கு வசிக்கும் மக்கள் உணவு, இருப்பிடம், குடிநீர் உள்ளிட்ட எவ்வித அடிப்படை வசதியுமின்றி அல்லல்பட்டு வருகின்றனர். அந்த நகரிலிருந்து வாகனங்கள் மூலம் வெளியேறும் வழிகள் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன. நடந்து சென்றால் மட்டுமே அந்நகரிலிருந்து வெளியேறும் நிலைமை உள்ளதாக உக்ரைன் துணைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் ஒருநாள் தொடரைக் கைப்பற்ற, டெஸ்ட், T20 தொடர்கள் ஆஸி. வசம்

அவுஸ்திரேலிய அணி 24 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுத்தொடரில் விளையாடிய நிலையில் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணியும், ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணியும் கைப்பற்றிய நிலையில் இறுதியாக நடைபெற்ற இருபதுக்கு 20 தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியது.

சுற்றுலா அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒரே ஒரு போட்டி கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் லாஹூரில்




நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 162 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக சிறப்பாக விளையாடிய அணித்தலைவர் பாபர் அஸாம் 46 பந்துகளில் 66 ரன்களை குவித்தார்.

இதனை தொடர்ந்து 163 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, 19.1 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 163 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக அணித்தலைவர் ஆரோன் பின்ச் 55 ரன்கள் எடுத்தார். அவரே போட்டியின் ஆட்டநாயகனாகவும் தேர்வானார்.

## த ஹண்ட்ரட் தொடரில் களமிறங்கும் முதல் இலங்கை வீரரானார் ஹஸரங்க

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "த ஹண்ட்ரட்" (100 பந்துகள் கொண்ட கிரிக்கெட் போட்டி) கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்க மென் செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணியில் ஒரு இலட்சம் பவுண்ஸ் விலையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தொடருக்காக இலங்கையில் இருந்து 22 வீரர்கள் பதிவு செய்த நிலையில், ஒரேயொரு வீரராக வனிந்து ஹஸரங்க மாத்திரமே வீரர்கள் வரைவின் மூலம் அணியொன்றுக்காக வாங்கப்பட்டார்.

வனிந்து ஹஸரங்க தன்னுடைய அடிப்படை தொகையாக 50 ஆயிரம் பவுண்ஸ்களை நிர்ணயித்திருந்த நிலையில், ஒரு இலட்சம் பவுண்ஸ்களுக்கு மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணியால் வாங்கப்பட்டார்.

த ஹண்ட்ரட் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் 3ஆம் திகதி முதல் செப்டெம்பர் 3ஆம் திகதிவரை இங்கிலாந்தில் நடைபெறவுள் ளதுடன், இலங்கையை பிரதிநிதித் துவப்படுத்தி குறித்த தொடரில் விளையாடவுள்ள முதல் வீரர் வனிந்து ஹஸரங்க என்பதும் குறிப்பிடத்தக்கது.







## ஆர்.பி.சி அணியில் இணைந்த புது மாப்பிள்ளை மெக்ஸ்வெல்

ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி கடந்த ஆண்டு ரூ.14.25 கோடிக்கு ஏலம் எடுத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரரான க்ளேன் மெக்ஸ்வெல் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக விளையாடினார். நடுவரிசையில் களமிறங்கி அதிரடி ஆட்டத்தால் ரசிகர்களை ஈர்த்திருக்கும் இவரை, மெகா ஏலத்துக்கு முன்பாக பெங்களூர் அணி ரூ.11 கோடிக்கு தக்கவைத்தது.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் ஆர்.சி.பி விளையாடிய முதல் 3 லீக் ஆட்டத்தில் மெக்ஸ்வெல் விளையாடவில்லை. தமிழகத்தை புர்வீகமாகக் கொண்ட வினி ராமனை காதலித்து திருமணம் செய்த மெக்ஸ்வெல் தாமதமாக மும்பை வந்தார். தனிமைப்படுத்தல் முடித்து நேற்று முன்தினம் அணியுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டார்.

ஆர்.சி.பி வீரர்கள் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர்கள் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்று வாழ்த்து தெரிவித்தனர். நாளை மறுதினம் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள லீக் போட்டியில் மெக்ஸ்வெல் விளையாடுவார் என்று ஆர்.சி.பி நிர்வாகம் அறிவித்துள்ளது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com







## ஹஸரங்கவின் சுழலில் சிக்கித் தவிக்கும் சாம்சன்

நடப்பு ஐ.பி.எல் தொடரின் 13ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மும்பை வான்கடே மைதானத்தில் மோதின. இப்போட்டியில் தினேஷ் கார்த்திக் மற்றும் ஷபாஸ் அஹமட் ஆகியோரின் அதிரடியால் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி த்ரில் வெற்றிபெற்றது.

இந்த போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவர் சஞ்சு சாம்சன் பெங்களூர் அணிக்காக விளையாடிவரும் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹஸரங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். சஞ்சு சாம்சன் ஹஸரங்கவிடம் ஆட்டமிழப்பது இது முதல் முறையல்ல. இதற்கு முன் 4 போட்டிகளில் நேருக்கு நேர் சந்தித்து 2 ஓட்டங்களை மட்டும் சேர்த்து, 3 முறை ஆட்டமிழந்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியிலும் ஒரு சிக்ஸர் அடித்துவிட்டு 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இதன் படி மொத்தமாக 5 போட்டிகளில் 8 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 4 போட்டிகளில் ஹஸரங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்துள்ளார் சஞ்சு சாம்சன்.

RCB vs RR
போட்டியை காண

## அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியை வீழ்த்திய கல்முனை ஸாஹிரா கல்லூரி

(நிந்தவூர் நிருபர்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 'டிவிசன் - 3' கடினபந்து கிரிக்கெட் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி அணி 2 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மற்றும் அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை அணிகளுக்கு இடையில் அண்மையில் அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டு 29.1 ஓவரில் சகல விக்கெட்களையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.






பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்க தேசிய கல்லூரி அணியினருக்கு ஆரம்பம் முதலே நெருக்கடியான பந்து வீச்சு பிரதிகளை வீசி 36.3 ஓவர்களில் 83 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் வீழ்த்தி 2 ஓட்டங்களால் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியர் ஏ.எம். அப்ராஜ் நிலாவின் வழிகாட்டலில் இப்போட்டியில் சிறப்பான திறமையை வெளிக்காட்டிய கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி வீரர் என்.எம். ஆபிர் போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டு விருதையும் பெற்றுக் கொண்டார்.

## வடக்கின் பெரும் சமர் ஒத்திவைப்பு!

யாழ். மத்திய கல்லூரியின் ஏற்பாட்டில் நாளை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறவிருந்த யாழ். மத்தியக் கல்லூரி மற்றும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 115ஆவது வடக்கின் பெரும் சமர் ஒத்திவைக்கப்பட்டது. நாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சுழ்நிலைகள் காரணமாக 115ஆவது வடக்கின் பெரும் சமர் ஒத்திவைக்கப்படுவதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்தனர்.



115ஆவது வடக்கின் பெரும் சமர் நடைபெறவுள்ள திகதிகள் தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் ஏற்பாட்டுக்குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். வடக்கின் பெரும் சமர் கடந்த வருடம் கொவிட்-19 தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், 2020ஆம் ஆண்டு நடைபெற்ற 114ஆவது வடக்கின் பெரும் சமரில் இன்னிங்ஸ் வெற்றியை பெற்று யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.








சம்மாந்துறையில் நடைபெற்ற பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளின் இறுதிப் போட்டி அண்மையில் சம்மாந்துறை தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் உதைபந்தாட்டத்தில் ரோயல் மெட்ரிட் கழகம் முதலாவது இடத்தினையும், மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிகளில் மொத்தமாக 13 தங்கம், 12 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கம் ஆகியவற்றினையும் தனதாக்கிக் கொண்டு, இந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த சம்பியன் மகுடத்தினை மீண்டும் தனதாக்கிக் கொண்டது. (படங்கள் - தாணீஸ்)

## தேசிய விளையாட்டு சபை உறுப்பினர்கள் பதவி விலகல்!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தலைமையிலான தேசிய விளையாட்டு சபை பதவி விலக தீர்மானித்துள்ளது.

சபையின் உறுப்பினர்களுக்கிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சராக செயற்பட்ட நாமல் ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து, அந்த வெற்றிடத்திற்கு புதிய ஒருவர் நியமிக்கப்படவுள் ளதுடன், தேசிய விளையாட்டு சபைக்கான புதிய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அரவிந்த டி சில்வாவின் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவும் பதவி விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7